

# கீதாசார்யன்





ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோபயவேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யராய்............
எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்ரீமான் வெங்கடகிருஷ்ணனுக்கு ஸ்வரூபாநுரூபம் க்ரியமாணம் மங்களாசாஸநம்..............................


இப்பவும் நீர் அனுப்பிவைத்த ''கீதாசார்யன்'' என்ற பத்ரிகையும் விண்ணப்பப் பத்ரிகையும் கிடைத்தன. மிக்க சந்தோஷம். ஷை பத்ரிகைக்கு நீர் ஆசிரியராகப் ப்ராப்த மானதற்கும் மிகமிக மகிழ்ச்சி.

[அட்டை 3-ம் பக்கம் பார்க்க]

T.C.A. Venkatesan

# கீதாசார்யன்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"


தொகுதி 1 | காளயுக்தி ௵ | பங்குனி மீ | மார்ச் 79 | பகுதி 6






ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P.T சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி.
திருவல்லிக்கேணி : சென்னை-600005.



ஆண்டுச் சந்தா ரூ 8

விலை 75 காசு

# ஆசிரியர் பக்கம்

இவ்விதழை ஸ்ரீ உ. வே. மஹா வித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் 88-வது திருநக்ஷத்திரபூர்த்தியை முன்னிட்டு சிறப்பு மலராக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்த கீதாசார்யன் பத்திரிகை இவ்வுலகில் உதிப்பதற்கே காரணம் ஸ்ரீ உ. வே ஸ்வாமிதான். அதைச் சிறிது விவரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அடியேனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலே ஸ்வாமியின் தொடர்பு ஏற்பட்டது. சிறுவயது முதலே ஸ்வாமியுடைய உபந்யாஸங்களுக்குப் போகும் பாக்கியம் ஏற்பட்டிருந்தது அடியேனுக்கு. அப்போதெல்லாம் அடியேனைப் பல படியாகத் திருத்திப் பணி கொண்டவர் நம் ஸ்வாமி. பொருளல்லாத வென்னையும் ஒரு பொருளாக்கி அடிமை கொண்டவர். உபந்யாஸங்களில் அடியேனைப் பாசுரங்களையும் ஸ்தோத்திரங்களையும் சொல்லச் சொல்லிக் கேட்டு மகிழ்வார். உபந்யாஸங்களில் அடியேனையும் பேசச் சொல்லி ஊக்குவிப்பார். இப்படியெல்லாம் அடியேனை வைதிகத் துறையில் ப்ரவேசிக்கச் செய்தவரே ஸ்வாமிதான்.

மேலும் தாம் புத்தகங்களை அச்சிடும்போது அச்சுத்தாள்களைத் திருத்தும் (Proof பார்க்கும்)படி நியமித்திருந்தார் ஸ்வாமி. முதலில் அதுபற்றி அடியேனுக்கு ஒன்றுமே தெரியாது. அப்போது அடியேனையும் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, புத்தகப் பதிப்பு விஷயங்களை பொறுமையாக, அருமையாகக் கற்றுத் தருவார். பின்னர் தம் பதிப்புக்களில் பெரும்பாலானவற்றின் பொறுப்பை அடியேனிடமே ஒப்படைத்திருக்கிறார். இவ்வாறு அச்சகத்துறையில் அடியேனுக்கு ஒரு தொடர்பு ஏற்படவும் காரணமாயிருந்தவர் நம் ஸ்வாமியே. கடந்த பத்து ஆண்டுகளாக ஸ்வாமியின் நூல்களைப் பதிப்பித்து வருவதால் அடியேனுக்கு ஏற்பட்ட லாபம் இரண்டு

அச்சகத்துறையில் ஏற்பட்ட தொடர்பு ஒன்று. ஸ்வாமியின் அமுதமன்ன நூல்களை ஊன்றி பார்ப்பதால் ஏற்பட்ட ஸம்ப்ர தாய அறிவு மற்றொன்று.

இவ்வசதிகளுடன் அடியேனுக்கு ஒரு சிறிய பத்ரிகை ஆரம்பிக்க வேணுமென்ற ஆசை உண்டாயிற்று அதை ஸ்வாமிடமும் தெரிவித்தேன். உடனே ஸ்வாமி ' என்னு டைய ஸ்ரீராமானுசன் பத்ரிகையை உனக்களித்து விடுகிறேன்; அதையே உனது பத்ரிகையாக நடத்தலாமே '' என்று உளம் கனிந்து அநுக்ரஹித்தார். உடனே அடியேன் '' வித்வான் களே உகக்கும் வண்ணம் தேவரீர் நடத்திவரும் பத்ரிகையின் பொறுப்பை ஏற்க அடியேனுக்குத் தைரியமில்லை அடியேன் ஆரம்பிக்க நினைப்பது ஒரு எளிய சிறிய பத்ரிகை. அதற்கு ஒரு பெயரையும் தேவரீரே தேர்ந்தெடுத்துத் தரவேணும்'' என்று விண்ணப்பித்தேன். உடனே ஸ்வாமியும் மகிழ்ச்சியுடன் '' கீதாசார்யன் '' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்து வழங்கி னார். மேலும் பத்ரிகை ஆரம்பிப்பதற்கான அரசாங்க அநு மதிகள் பெறுவதுபோன்ற சிறிய விஷயங்கள் முதற்கொண்டு பத்ரிகை அமைய வேண்டியமுறை போன்ற பல விஷயங்களில் வழிகாட்டியாக இருந்து பத்ரிகை வெளியிடுவதற்கான நல்ல நாளையும் குறித்துக் கொடுத்தார். தாமே எழுந் தருளியிருந்து வெளியிடவும் அருளினார். இப்படியாக கீதா சார்யன் இவ்வுலகில் நடையாடுவதற்குக் காரணமானவர் நம் ஸ்வாமி ஒருவரே.

நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரங்களை அருளிச் செய் யும்போது '' என்றைக்கும் என்னை '' (7–9) என்ற பதிகத்தில் எம்பெருமானே ஆழ்வார் வாயிலாகத் திருவாய்மொழியை அருளிச் செய்கிறான்—என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசன்—என்கிறார். இதற்கு எம்பெருமானார் அருளிச் செய்யும் உரை மிகவும் அழகானது.

ஒரு சிறிய குழந்தை எழுதக் கற்றுக் கொள்ளும்போது தானே எழுத முயன்றால் ஏதோ ஒருபடியாக எழுதும். தந்தையோ அல்லது குருவோ குழந்தைக்கு எப்படி எழுதவேணும் என்று எழுதிக் காண்பித்தால் அது அழகான எழுத்தாகவே இருக்கும். அப்படியல்லாமல் அவன் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு எழுதச் சொல்லித் தரும்போது இவன் ஒரு பக்கம் கையை இழுக்க, குழந்தை ஒரு பக்கம் இழுக்க அது எழுத்தாகவே அமையாமல் ஒரே கிறுக்கலாக இருக்கும். அப்படியே என்னைக் கருவியாகக் கொண்டு கவிபாடச் செய்தேயும் என்னால் வரும் குற்றம் தன் பக்கல் படாதபடி பாடுவித்தான் எம்பெருமான் என்கிறார் நம்மாழ்வார். இது எம்பெருமானாருடைய சுவையான விளக்கம்

அப்படியே நம் ஸ்வாமியும் அடியேனைக் கொண்டு பல காரியங்களைச் செய்து கொண்டாலும் அடியேன் செய்துள்ள பல குற்றங்களை அவ்வப்போது திருத்தியும் குட்ட வேண்டிய இடத்தில் குட்டி, பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும் பணிமானம் பிழையாமே அடியேனை திருத்திப் பணி கொண்டு வருகிறார் நம் ஸ்வாமி தமது 83வது திருநக்ஷத்திரம் வரையில் ஸ்வாமி எவ்வளவோ அடியார்களைக் கடாக்ஷித்திருந்தாலும் "பலரடியார் முன்பருளிய" என்றபடி அடியேனைக் கடாக்ஷித்து அடியேன் மூலம் 'கீதாசார்யனை' வெளியிடுவித்தது விசேஷ கடாக்ஷமே. இப்படிப்பட்ட ஸ்வாமிக்கு சிறப்பு மலர் வெளியிடுவதில் பெருமிதம் கொள்ளாமல் வேறு என்ன செய்ய முடியும்? ஸ்வாமி எம்பெருமானாரைப் போலவே நூற்று இருபது வருடங்களுக்கும் மேலாக எழுந்தருளியிருந்து இவ்வுலகை வாழ்விக்க வேணுமென்று எம்பெருமானை இறைஞ்சுகிறோம். "அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு".

வேங்கடகிருஷ்ணன்

ஆசிரியர்.

# ஸ்வாமியுடன் ஒரு பேட்டி

(ஒலிப்பதிவு செய்யப்பட்டது)

**கே: தேவரீருக்குப் 'பிரதிவாதி பயங்கரம்' என்று பெயர் வரக்காரணம் என்ன?**

ப: அது என்னுடைய பெயரல்ல. எங்களுடைய மூல புருஷருடைய பட்டப் பெயராகும். அவர் திருநாமம் பிரதிவாதி பயங்கரம் அண்ணன் என்பது. அவர் காஞ்சிபுரத்தில் விளக்கொளி ஸன்னிதியில் வாழ்ந்து வந்தார். அவர் வேதாந்த தேசிகரின் குமாரரான நயனாசார்யரிடம் ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் பயின்றார். (அப்போது வேதாந்த தேசிகன் எழுந்தருளியிருக்கவில்லை) பின்னர் மணவாள மாமுனிகளின் பெருமையைக் கேள்விப்பட்டு ஸ்ரீரங்கம் சென்று அவர் திருவடிகளிலே ஆச்ரயித்து அவர் திருவருளால் அத்யாத்ம சாத்திரங்கள் எல்லாம் கற்று. அவர்நியமித்தருளின அஷ்ட திக்கஜாசார்யர்களிலே ஒருவரானார்.

**கே: அவருக்குப் பிரதிவாதி பயங்கரம் என்று பெயர் வரக்காரணம்?**

ப: அவர் முன்னர் நயனாசார்யரிடம் சீடராக இருந்த போது ஒரு அத்வைதி பண்டிதரை வாதத்தில் வென்றமையால் மகிழ்ந்த நயனாசார்யர் அவரை "பிரதிவாதி பயங்கரரே" என்று கொண்டாடினார். அதுமுதல் அவரும் அவரது சந்ததியாரும் 'பிரதிவாதி பயங்கரம்' என்றே வழங்கப் படுகிறார்கள்.

**கே: தேவரீர் பிறந்த ஊர் காஞ்சிபுரமேதானா?**

ப: ஆம். இங்கேயேதான் என்னுடைய மாதாமஹரான (தாய்வழிப் பாட்டனார்) ஷஷ்டி ஜீயர் ஸ்வாமியின் திருமாளிகையில் பிறந்தேன்.

**கே: இளமைக் கல்வி பற்றிக் கூற முடியுமா ?**

ப: என்னுடைய திருத்தகப்பனர் பெயர் அண்ணு ரங்காசாரியர். அவரிடம் என்னுடைய இளமைக் கல்வி களைப் பயின்றேன், என்னுடைய ஆருவது வயதிலேயே உபநயனம் ஆகிவிட்டது. 9வது வயதுக்குள் மூவாயிரமும் சந்தை சொல்லி வைத்தார் எனது திருத்தகப்பனர். பிறகு இரண்டு வருடங்கள் கழித்து எனக்கு திருவிலச்சினை (சமாச்ரயணம்) செய்வித்து திருவாய்மொழி ஆயிரமும் கற்பித்தார். இவையெல்லாம் காஞ்சீபுரத்திலும் எமது கிராமமான சித்தாத்தூர் திருவடி ராயபுரத்திலும் எமது திருத்தகப்பனரிடம் கற்றவை. இவைத்தவிர திருத்தகப்பனரின் மாதுலரான (மாமா) கிடாம்பி கிருஷ்ணமாசாரியரிடமும் அனேக நூல்கள் பயின்றேன்.

**கே: ஸம்ஸ்க்ருத நூல்கள் கற்றதும் அவரிடத்திலேயா ?**

ப: அவரிடம் முதலில் சில நூல்கள் கற்றேன். பிறகு ஸ்ரீ உ. வே. ஜகத்குரு காழி அனந்தாசாரியர் ஸ்வாமியிடம் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் உள்பட பல ஸம்ஸ்க்ருத நூல்கள் கற்றேன். அவர் வடநாட்டிற்கு எழுந்தருளிய போது அவர் நியமனப்படியே இளங்காடு ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடமும், புதுப்பேர் வேங்கடாசாரியர் ஸ்வாமியிடமும் வாசித்தேன். இவை தவிர நைஷ்டி ஐயர் ஸ்வாமியிடம் பகவத் விஷய ரஹஸ்ய காலக்ஷேபங்கள், மூவாயிர வியாக்யானங்கள் தமிழிலக்கண இலக்கியங்கள் அஷ்டப்பிரபந்தங்கள், கம்பராமாயணம், இவை பயின்றேன்.

**கே: தேவரீர் வேதங்களைக் கற்றது யாரிடம்? கற்க வேண்டும் என்ற ஆவல் உண்டானது எப்போது ?**

ப: முதலில் உபயுக்தமான (சிற்சில) வேதபாகங்களை நரஸிம்மாசாரியர் என்பவரிடம் கற்றேன். பிறகு வேதாத்யயனம் என்னுடைய ஸம்ஸ்க்ருதக் கல்விக்கு இடையூறாக

இருந்தபடியால் நிறுத்திவிட்டேன். பின்னர் என்னுடைய 19 வயதுக்கு மேல் மாம்பள்ளம் ஸுதர்சனாசாரியார் என்ற ஸ்வாமியிடம் வேதாத்யயனம் பண்ண ஆரம்பித்தேன். என்னுடன் கற்றவர்கள் சுமார் 25 பேர். வேதம் கற்பதற்காக வென்றே ஒரு பாடசாலை ஏற்படுத்தி அதற்காக ஒரு கட்டிடம் வாங்கினேன். கற்ற வேதங்களை ப்ரதிதினம் திருவீதிகளில் பாராயணம் செய்வதற்காக ப்ரதக்ஷிணம் ஆரம்பித்தோம். 1919ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேதபாராயண ப்ரதக்ஷிணம் 49 வருடங்கள் நடந்தது. 1964ல் எனக்கு Heart Attack வந்தபோது அது தடைப்பட்டது.

**கே: தேவரீருக்கு எவ்வளவு பாஷைகள் தெரியும்? எத்தனை பாஷைகளில் நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்?**

ப: எனக்கு தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஸம்ஸ்க்ருதம் ஆகிய நான்கு பாஷைகள் தெரியும். நான்கு பாஷைகளிலுமே நான் நூல்கள் எழுதியிருக்கிறேன்; உபந்யாசங்களும் செய்திருக்கிறேன்.

**கே: இதுவரை தேவரீர் எவ்வளவு நூல்கள் எழுதியிருக்கிறீர்கள்?**

ப: நான்கு பாஷைகளிலும் இதுவரை நான் 1207 நூல்களை எழுதியிருக்கிறேன். இங்கே நான் அமர்ந்திருக்கும் அறையில் வைத்திருக்கும் புத்தகங்களில் கால்பாகம் புத்தகங்கள்தான் நான் வாசித்தவை. மீதி முக்கால் பாகம் புத்தகங்கள் நான் இயற்றினதாயும் அச்சிட்டதாயுமுள்ள புத்தகங்களே.

**கே: இதுவரை தேவரீர் எழுதியுள்ள நூல்களை வகைப் படுத்தக் கூறமுடியுமா?**

ப: நான் 16வகையான நூல்களை எழுதியுள்ளேன். முக்யமாக பூர்வாசார்ய க்ரந்தங்களையெல்லாம் அச்சிட்டிருக்

கிறேன். ராமாநுஜர் அருளிய க்ரந்தங்களையெல்லாம்—ராமாநுஜ க்ரந்தமாலா—என்ற பெயரிலும் வேதாந்த தேசிகர் அருளியுள்ள நூல்களையெல்லாம் வேதாந்த தேசிக க்ரந்தமாலா என்றும் மணவாள மாமுனிகள் அருளியுள்ள நூல்களையெல்லாம் வரவரமுநீந்த்ரக்ரந்தமாலா என்றும் வெளியிட்டிருக்கிறேன். இவை தவிர என்னுடைய சொந்த நூல்களாக 15 நூல்களில் வெளியிட்டிருக்கிறேன். என்னுடைய 19வது வயதிலே ஆரம்பித்து நாலாயிர திவ்ய ப்ரபந்தத்திற்கும் விரிவுரைகள் எழுதியிருக்கிறேன்.



**கே : இது தவிர தேவரீர் பத்திரிகைகளும் நடத்தி வருகிறீர்களல்லவா ?**

ப : ஆமாம். நான்கு பாஷைகளிலும் நடத்தி வருகிறேன். 'வைதிக மநோஹரா' என்று ஸம்ஸ்கிருதத்திலும்

ஹிந்தியிலும் பத்திரிகைகள் வெளியிடுகிறேன். தெலுங்கிலே 'ராமாநுஜ பத்ரிகா' என்றும் தமிழில் ஸ்ரீராமாநுஜன் என்றும் பத்திரிகைகள் நடத்தி வருகிறேன்.

**கே: எல்லாப் பத்திரிகைகளுக்கும் தேவரீரே ஆசிரியராகப் பொறுப்பெடுத்துக் கொண்டு நடத்துகிறீர்களா ? அல்லது ஒவ்வொரு பாஷைக்கும் ஒரு பிரதிநிதியை நியமித்து நடத்துகிறீர்களா ?**

ப: எல்லாப் பத்திரிகைகளுக்கும் நானே ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறேன். இதுவரை நான் ஒரு உதவியாளரையும் வைத்துக் கொண்டதில்லை. இப்பத்திரிகைகள் ஆரம்பித்து 32 வருஷங்கள் ஆகின்றன.

**கே: தேவரீருக்கு நான்கு பாஷைகள் தெரியும் என்று கூறினீர்கள். தேவரீருக்கு ஆங்கிலமும் தெரியுமா ?**

ப: வானமாமலை மடம் பாடசாலையில் நான் வாசித்துக் கொண்டிருந்தபோது, நான் ஆங்கிலம் பயில வேண்டும் என்று எனது தாயார் விரும்பினார். ஆனால் எனது திருத்தகப்பனார் அதற்கு சம்மதிக்கவில்லை பின்னர் எனது திருத்தகப்பனார் ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டிருந்தபோது சிகிச்சை செய்ய ஒரு டாக்டர் வந்தார். எனது தகப்பனாரே என்னை அவரிடம் ஆங்கிலம் பயிலும்படி நியமித்தார். அவரிடம் சுமார் 1½ வருடம் பயின்றேன். பிறகு வேங்கடார்யன் என்பவரிடம் சில காலம் வாசித்தேன். இப்போதும் ஆங்கில பாஷை தெரியாதென்றாலும் எழுதவும் வாசிக்கவும் நன்றாகத் தெரியும். என்னுடைய கையெழுத்துக்கள் எல்லா பாஷைகளிலுமே நன்றாக அழகாக இருக்கும். என்னுடைய ஆங்கில எழுத்தைக் கண்டவர்கள் தேவரீர் ஒரு B. A. வா என்று கேட்கிறார்கள். அவர்களிடம் நான் PBA என்று சொல்லுகிறேன். (சிரிப்பு)

**கே: தேவப் பெருமாளைவிட தேவப் பெருமாள் கோஷ்டியில் தேவரீருக்கு ஈடுபாடு அதிகமிருக்கக் காரணம் என்ன ?**

ப: என்னுடைய திருத்தகப்பனார் என்னை ஒருநாளும் கோஷ்டியை விடக் கூடாது என்று நியமித்திருந்தார். அவருடைய திருவருளே காரணம். நான் ஒருநாளும் இயல் கோஷ்டியை விட்டதுமில்லை ; ஸேவித்ததுமில்லை.

**கே: இயல் கோஷ்டியை ஸேவித்ததில்லை என்றால்...?**

ப: கோஷ்டி ஆரம்பிக்கும்போதே கோஷ்டியில் இருந்து விட்டால் கோஷ்டியை ஸேவிக்க வேண்டியிராது. நடுவில் சேர்ந்து கொண்டால்தான் ஸேவிக்க வேண்டிய அவசியம் நேரும். நான் ஒரு நாளும் கோஷ்டி ஆரம்பித்த பிறகு போனது கிடையாது. எப்பொழுதும் கோஷ்டி ஆரம்பிக்கும் முன்னரே தயாராக இருப்பேன். இதற்கெல்லாம் காரணம் அடியேனுக்குத் தகப்பனார் அநுக்ரஹத்தால் ஏற்பட்ட கருவிலேதிருவாகும்.

**கே: பெருமாள் புறப்பாட்டில் திவ்யப்ரபந்த கோஷ்டி முன்னேயும் வேதபாராயண கோஷ்டி பின்னேயும் வரக் காரணம் என்ன?**

ப. தமிழ் வேதமான திவ்யப்பிரபந்தங்கள் எம்பெருமானுடைய கல்யாண குணங்களை எல்லாம் சொல்லுகின்றன. ஆனால் ஸம்ஸ்கிருத வேதங்கள் எம்பெருமானுடைய கல்யாண குணங்களைச் சொல்லவாரம்பித்து, சொல்லமுடியாமல் பின்னடைந்து விட்டனவாம். (யதோ வாசோ நிவர்த்தந்தே) இதையே வேதாந்த தேசிகர், கம்பர் போன்றவர்களும் வலியுறுத்துகின்றனர். எனவே தான் வேதபாராயணம் பின்னேயும் அருளிச் செயல் முன்னேயும் இருக்கின்றன.

**கே: தேவரீர் எழுதியுள்ள நூல்களிலேயே சிறந்தது என்று எதைக் கருதுகிறீர்கள் ?**

ப: நான் எழுதியுள்ள நூல்களில் 'ஸ்ரீபாஷ்யஸாரம்' என்று தமிழில் எழுதியுள்ள நூலையே மிகவுயர்ந்த நூலாகக்

கருதுகிறேன். மேலும் நாலாயிரத்திற்கும் ஸம்ஸ்க்ருதத்தில் நான் எழுதியுள்ள வியாக்கியானங்களும் மிகச் சிறந்தவை.

**கே: தேவரீர் முதன் முதலில் எழுதிய நூல் எது என்று நினைவிருக்குமா ?**

ப: அப்போது எனக்கு 15 வயதிருக்கும். ஒரு வித்வான் காஞ்சிபுரம் நூற்றுக்கால் மண்டபத்தில் திவ்யப்ரபந்தம் தமிழில் அமைந்திருப்பதால் மதிக்கத் தக்கதன்று என்று கூறினார். அப்போது நான் அவருக்கு மறுப்பாக "திவ்யப்ரபந்த வைபவ விவேக:" என்று ஸம்ஸ்க்ருதத்தில் சுமார் 30 பக்கங்கள் கொண்ட நூலை எழுதினேன். அதுதான் நான் முதன் முதலில் எழுதிய நூல் ஆகும்.

**கே: தேவரீர் முதன் முதலில் செய்தருளிய உபந்யாசம் எப்போது எங்கு என்று கூறமுடியுமா ?**

ப: அடியேனுடைய குருவான ஸ்ரீ உ. வே. காஞ்சி அநந்தாசாரியர் ஸ்வாமியுடன் உடையவர் உத்ஸவத்திற்காக ஐதராபாத் (ஸீதாராம் பாக்) சென்றிருந்தேன் ஒரு சமயம். அப்போது எனக்கு 16 வயதிருக்கலாம். அப்போது அங்கிருந்தவர்கள் காஞ்சி ஸ்வாமியை ஏதாவது உபந்யஸிக்க வேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். உடனே அவர் "அண்ணா நீயே ஏதாவது உபந்யஸி" என்று நியமித்தார் அந்த நியமனமே என்னுடைய உபந்யாசங்களுக்கெல்லாம் காரணம். அப்போதே நான் உடையவர் வைபவம் பற்றி உபந்யஸித்தேன்.

**கே: அன்றிலிருந்து இன்று வரை தேவரீருடைய குரல் கணீரென்று கம்பீரமாகவுள்ளது. அதற்குக் காரணம் என்ன? குரல்வளத்தைப் பாதுகாக்க மருந்துகள் ஏதேனும் உபயோகிப்பதுண்டா ?**

ப: அடியேனுடைய குரல் வளத்திற்குக் காரணம் எம் பெருமானுடைய திருவருளே. அதற்காக தான் மருந்து ஏதும் உபயோகிப்பதில்லை. மருந்தும் பொருளும் அமுதமும் அவனே.

**கே: தேவரீர் அநேகம் உபந்யாஸங்கள் அருளிச்செய்து உலகத்தை உய்வித்திருந்தாலும் தேவரீருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றும் சிஷ்யர்கள் என்று யாரையும் உருவாக்க வில்லை என்று குறை கூறப்படுகிறதே .....**

ப: நான் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் எழுதியிருக் கிறேன். இன்றைக்கு உபந்யாஸம் செய்யும் வித்வான்கள் பலர் அப்புத்தகங்களைப் படித்து அவற்றையே உபந்யாஸ மாகச் செய்வதாக எனக்கு எழுதுகிறார்கள். அவர்களை யெல்லாம் எனது சிஷ்யர்களாகவே கொள்ளலாம். எனது சிஷ்யர்கள் என்று சிலரை உருவாக்கவில்லையானாலும் நூற்றுக்கணக்கான வருஷங்கள் இருக்கக் கூடிய ஆயிரக்கணக் கான புத்தகங்களை எழுதியிருக்கிறேன் அல்லவா? அவைகளே போதும்.

**கே: நலிந்துவரும் நமது ஸம்ப்ரதாயத்திற்கு தேவரீருக் குப் பிறகு தேவரீருடைய வாரிசாக யாரை நியமிக்கிறீர்கள்?**

ப: ஸ்ரீ உ. வே. வித்வான்கள் சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியர் வேளுக்குடி வரதாசாரியர், பிள்ளைலோகம் பாஷ்யகாசாரியர், S. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் (ஸுதர்ச னம் பத்ராதிபர்), நல்லான் ராமகிருஷ்ணய்யங்கார், K. A. மணவாளன் ஸ்தலசயனத்துறைவார் முதலான பல வித்வான் கள் நமது ஸம்ப்ரதாயத்தை வளர்த்து வருகையில் "நலிந்து வரும் ஸம்ப்ரதாயம்" என்று கூறுவதே தவறு. எனவே நான் வாரிசு என்று யாரையும் நியமிக்க வேண்டிய அவசியமே யில்லை.

**கே : ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இருந்து வரும் தென்கலை வடகலைப் பிரிவுகள் பற்றி ஏதேனும் கூறமுடியுமா ? இதில் வேதாந்த தேசிகருடைய பங்கு எவ்வளவு.**

ப ; வேதாந்த தேசிகருடைய காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பிளவு இருந்தது கிடையாது. ஏன் ? 1800க்கு முன் தென்கலை வடகலைப் பிரிவுகளே கிடையாது என்று நான் துளசிமாலை அணிந்து சபதமிட்டுக் கூறுகிறேன். வேதாந்த தேசிகர் உபாஸனைகளினால் ஞானம் பெற்றவர். எனவே அவர் அளவிறந்த நூல்களை அருளிச் செய்திருக்கிறார். அதனால் அவருக்கு சிறிது மதிவிப்ரமங்கள் ஏற்பட்டிருந்தன. முதலில் அவர் பிள்ளைலோகாசார்யருடைய ஒரு அபிப்ராயத்தைக் கண்டிப்பார். பிறகு சில பக்கங்கள் தள்ளினால் "இப்படி அருளிச்செய்துள்ளவர்களுக்கு இது கருத்து" என்று எழுதுவார். இன்னும் சில ஏடுகள் கழித்து முன்னால் கண்டித்த அபிப்ராயங்களைத் தாமே ஒப்புக்கொண்டு எழுதுவார். இவருடைய முந்தைய அபிப்ராயங்களை அவர் காலத்துக்குப் பிறகு ஒரு பிரிவினர் பின்பற்றத் தொடங்கினர். இதுவே வடகலை தென் கலை தோற்றத்திற்குக் காரணம்.

**கே : தேவரீருக்கு 'மஹா மஹிமோபாத்யாய' பட்டம் கிடைத்தது எங்கு ? எப்போது ?**

ப : 1972ல் அலஹாபாதில் ஸப்தரிஷிகள் என்று எழுவரைத் தேர்ந்தெடுத்தனர். அப்போது எனக்கு முதலில் உப ஜனாதிபதி திரு. பாதக் அவர்கள் மஹாமஹிமோபாத்யாய பட்டத்தை வழங்கினார்.

**கே : தேவரீர் இதுவரை திவ்யதேச யாத்திரைகள் அனேகம் தடவை சென்றிருக்கிறீர்கள் என்று அறிந்தோம். ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்கள் அனைத்தையும் ஸேவித்திருக்கிறீர்களா ?**

ப: இதுவரை வடதேச யாத்திரைகள் மட்டும் 23 தடவை சென்றிருக்கிறேன். ஸ்ரீவைஷ்ணவ திவ்யதேசங்கள் 108ல் இப்பூவுலகில் இருப்பவை 106. அவற்றுள் ஸாளக்கிராமம், திருப்பிரிதி தவிர மற்ற 104 திவ்யதேசங்களையும் ஸேவித்திருக்கிறேன்.

**கே: நமது ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த பலர் மிகவும் அதிகாலையிலேயே ஆபீ சென்று விடுகின்றனர். அவர்கள் வீடு திரும்ப வெகு நேரமாகி விடுகிறது. இவர்கள் இப்படி லௌகிகத்தில் ஈடுபட்டிருப்பதால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அநுசரிக்க முடிவதில்லை. அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களை சுருக்கமாகக் கூற முடியுமா ?**

ப: காலையில் எழுந்து ஸந்த்யாவந்தனம் செய்தவுடன் திருப்பாவை முப்பது பாசுரங்களையும் அநுசந்திக்க வேணும். அதற்கும் நேரம் இல்லையானால் "சிற்றம் சிறுகாலே" என்ற பாசுரத்தை மட்டுமாவது அநுசந்திக்க வேணும். இது செய்தாலே அவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைக் கடைப்பிடித்தவர்களாவர்.

**கே: தேவரீர் பெற்ற பெரும் பேறாகக் கருதுவது எதை?**

ப: மணவாள மாமுனிகளுடைய ஸம்ப்ரதாயத்திலே நான் பிறந்ததையே பெரும் பேறாகக் கருதுகிறேன். "நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே" என்று தயரதன் ராமனை வேண்டியது போல நானும் "நின்னையே குருவாகப் பெறப் பெறுவேன் ஏழ்பிறப்பும் யதீந்த்ரப்ரவணா" என்று அநுதினமும் பிரார்த்திக்கிறேன்.

**கே: இதுவரையில் எவ்வளவோ சாதனைகள் புரிந்திருக்கிறீர்கள். 'இன்னும் நாம் செய்து முடிக்கவில்லை' என்ற மனக்குறை ஏதேனும் உண்டா ?**

ப. இதுவரையில் எவற்றையெல்லாம் நான் சாதித்திருப்பதாக நினைத்திருக்கிறீர்களோ, அவைகளுக்கு ஒரு குறையும் வராமலிருந்தால் அதுவே போதும்.

**கே: தேவரீர் உபந்யாசமருளிச் செய்யும்போது சபையில் உள்ளவர்களிடம் கேள்விகள் கேட்பது எதற்காக? குறிப்பாக வித்வான்களைப் பரீட்சிப்பது போல சில கேள்விகளைக் கேட்பதால் அவர்கள் சங்கடப்படுவதாக சொல்லப்படுகிறதே.**

ஒருவரையும் சங்கடப்படுத்துவதற்காக நான் கேள்விகள் கேட்பதில்லை. இவர் இன்னின்ன விஷயங்களை அறிந்து கொண்டிருக்கிறார் என்பதை சபையாரும் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காகவே அவர்களைக் கேட்கிறேன். மேலும் வேதம், திவ்யபிரபந்தம் ஸ்தோத்ரங்கள் இவை அறிந்தவர்கள் எனது உபந்நியாசங்களுக்கு வந்தால், என்னுடன் கூட அவர்களையும் சொல்லச் சொல்கிறேன். இது சபையார் மகிழ்வதற்காகவே யொழிய அவர்களைப் பரீட்க்ஷிப்பதற்காக அல்ல.

**கே: தாங்களும் ஒரு பத்ரிகாசிரியர் என்ற முறையில் கீதாசார்யனைப் பற்றித் தங்கள் அபிலாஷைகள் என்ன?**

ப. **கீதாசார்யன்** நன்றாக வளர்ச்சியடைய வேணும். இன்னும் பக்கங்களை அதிகரிக்க வேணும். அது வளர வளர என்னுடைய ஸ்ரீராமாநுசனையே நிறுத்தி விட்டு, இதையே நமது பத்ரிகையாகக் கொள்ளவேணும் என்று நினைக்கிறேன்.

பேட்டி: **K. A. மணவாளன்**
**T. A. பாஷ்யம்.**

நம் ஸ்வாமி கடந்த 49 ஆண்டுகளாக சென்னையில் மார்கழி மார்கழி மாதம் தோறும் திருப்பாவை உபந்யாசம் செய்து வருகிறார் இதுவரை திருப்பாவை உபந்யாசம் மட்டும் 51 தடவை செய்துள்ளார்

நம்ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கம் அரையர் ஸேவையில் ஈடுபாடு அதிகம். உபந்யாஸங்கள் இல்லாத சமயத்தில் ஸ்ரீரங்கம் சென்று பகல் பத்து உத்ஸவம் ஸேவிக்கத் தவறவே மாட்டார். தாம் ஒரு அரையர் குடும்பத்தில் பிறக்கவில்லையே என்ற குறை கூட ஸ்வாமிக்கு உண்டு. அதைப் போக்கிக்கொள்ள ஒவ்வொரு மார்கழி மாதமும் திருப்பாவை உபந்யாசத்தில் ஒருநாள் அரையர் ஸேவை செய்வது வழக்கம். அரையரைப்போலவே குல்லாய் (கிரீடம்) அணிந்து கொண்டு ஸ்வாமி அரையர் ஸேவை செய்யும் பாங்கு கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தாகும்.



"மதுரகவி"

# அழியாத கதாபாத்திரங்கள்

## தீபம். நா. பார்த்தசாரதி

இராமாயண, மகாபாரதக் கதாபாத்திரங்கள் அழியாத குணம்சங்களின் உருவகங்களாக உலகம் உள்ளளவும் நிற்பர். ஒரு தேசத்தின் தேசிய குணத்தையே (National character) அடையாளம் காட்டும் மிக உன்னதமான கதாபாத்திரங்களால் தான் அந்நாட்டு இலக்கிய வரலாறே உருவாக முடியும். இவ்வகையில் பாரத நாட்டின் தேசிய இலக்கியச் செல்வங்களாக இமயம் முதல் குமரி வரையில் ஒப்ப முடிந்த எவற்றையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியும் என்றால், அவை இராமாயண பாரத இதிகாசங்களே ஆகும். இராமன், தருமன், அர்ச்சுனன், கர்ணன், கண்ணன், வீமன், இராவணன், துரியோதனன், சகுனி, சீதை, திரௌபதி, சுபத்திரை, காந்தாரி, கூனி, கைகேயி, கோசலை, இலக்குவன், பரதன், அநுமன், போன்ற கதாபாத்திரங்களின் காலம் நேற்றோடு முடிந்துபோய் விட்டதென்று நினைப்பது அறியாமை. இவர்கள் ஒருவகையில் உலகின் நிரந்தரக் கதாபாத்திரங்கள் (Eternal character) என்பதை அறிய வேண்டும். உலகின் எல்லாக் காலத்து நல்லவர்களையும் தீயவர்களையும் இவர்கள் உருவகப்படுத்துகிறார்கள். இராமன், கிருஷ்ணன், தருமன் போன்ற பேராண்மையாளர்களின் உதாரணங்கள் வேண்டுமானால் அபூர்வமாகவே உலகில் காணக் கிடைக்கலாம் ஆனால் துரியோதனன், துச்சாதனன், இராவணன், சகுனி போன்றவர்கள் ஒருவேளை அதிகமாகத் தென்படலாம். அது தலைமுறைக்குத் தலைமுறை மனித சமூகம் என்ற ஆற்றில் பண்பாடு என்ற நீர் ஒழுகுவதையும், வற்றுவதையும் பொறுத்தது ஆகும்.

உலகில் எந்நாட்டைச் சேர்ந்த யார் படித்தாலும் புரியக் கூடிய (Universal appeal) கதாபாத்திரங்கள் இவர்கள். கிரேக்க நாடு என்றவுடன் ஹெலனும், அக்கிலீசும் நினைவு வருவது போல இந்தியா என்றதும் இராமனும், சீதையும், கண்ணனும் நினைவு வருவார்கள். சாதாரணமான கதாபாத்திரங்களுக்கு இப்படிச் சிறப்புக் கிடைக்காது. உத்தமமான இந்திய குணங்களின் உருவமாக இராமனும், தருமனும் வரு

கிறார்கள். அப்படியானால் பாரத நாட்டில் உத்தமமானவரல்லாதவர்களே தோன்றியதில்லையா என்ற கேள்வி எழவே செய்யும். அதற்குப் பதில் போலத்தான் இராவணன், சகுனி, துரியோதனன், துச்சாதனன் எல்லோரும் கிடைக்கிறார்கள். யார் யாரைப் போல் வாழ வேண்டுமென்பதற்கு முன்னுதாரணமாக இராமனும், சீதையும், தருமனும், கிருஷ்ணனும் கிடைக்கிறார்கள் என்றால், யார் யாரைப் போல வாழக் கூடாது என்பதற்கு முன்னுதாரணமாக இராவணனும், துரியோதனனும், சகுனியும், துச்சாதனனும் வருகிறார்கள். என்றால் இவை உதாரணங்களாக மட்டுமே நின்று விடுமா என்ற கேள்வி தவிர்க்க முடியாதபடி எழக் கூடும். எல்லா நல்ல உதாரணங்களும் நிச்சயமான படிப்பினைகளே. உபதேசமாக ஓர் அறிவுரையைக் கூறுவதை விட அதைக் கடைப்பிடிக்கும் சத்கதாபாத்திரங்களையும் கடைபிடிக்காத நியகதாபாத்திரங்களையும் மக்கள் முன்னே நிறுத்துவது சாலவும் சிறந்த காரியம் ஆகும். நமது புராதனமான இதிகாசங்கள் அந்தக் காரியத்தை மிகவும் நயமாகச் செய்கின்றன என்பதை உணர வேண்டும். "இதிகாசங்களை எரிப்பேன் அழிப்பேன்"— என்பவர் யாராயிருந்தாலும் 'தேசீய கலாசாரத்தை அழிப்பேன் எரிப்பேன்'—என்பதையே அவர் வேறு வார்த்தைகளில் சொல்கிறார் என்று அர்த்தம். தேசியக் கலாசாரத்தை அழிப்பதை விடத் தேசத் துரோகக் குற்றம் வேறொன்று இருக்க முடியாது. ★

---

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பரதாயத்தில் பொதுவாக 'ஸ்வாமி' என்பது ஸ்ரீராமாநுஜரையே குறிக்கும். ஸ்ரீவைஷ்ணவர்கள் பொதுவாக ஸ்ரீராமாநுஜரின் அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரை 'ஸ்வாமி ஸன்னதி' என்றே குறிப்பிடுவது வழக்கம். அதுபோல ஸ்ரீராமாநுஜரின் மறு அவதாரமாகவே விளங்கும் அண்ணங்கராசாரியரும் பொதுவாக 'ஸ்வாமி' என்றே அனைவராலும் குறிப்பிடப்படுகிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸ்வாமி இருந்தாலும், பொதுவாக 'ஸ்வாமி' என்பது அண்ணங்கராசாரியர் ஸ்வாமியையே குறிக்கும்

'மதுரகவி'

# ''உன் நாவில் இருப்பேன்''

## சாண்டில்யன்

"வைகுண்டேது பரே லோகே ச்ரியஸார்த்தம் ஜகத்பதி :, ஆஸ்தே விஷ்ணு : அசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ''. என்கிற விஷ்ணு புராண ஸ்லோகப்படி ஸ்ரீவைகுண்டத்தில் பக்த பாகவத கோஷ்டிகளுடன் எழுந்தருளியிருக்கிற பகவான் திடீரென்று எதையோ ஸங்கல்பித்துக் கொண்டு சிங்காதனத்திலிருந்து எழுந்து, "ஆதி சேஷா! இப்படி என் முன்னால் வா என்று ஆக்ஞாபித்தார்''.

"இருந்தால் சிங்காதனமாம்'' என்று அதுவரை சிங்காதனமாயிருந்த ஆதிசேஷனும் உடல் சுருளை நீக்கி நீள் உருக் கொண்டு எதிரில் வந்து தனது ஆயிரம் தலைகளாலும் எம்பெருமான் திருவடிகளில் வணங்கி பகவத் ஆக்ஞையை எதிர் பார்த்து நின்றான்

"நீ மறுபடியும் பூலோகம் செல்ல வேண்டும்'' என்று பகவான் ஆணையிட்டார்.

ஆயிரம் தலைகளும் நீண்ட உடலும் ஒருமுறை நடுங்கின. ''பிரபூ! மீண்டும் பூலோகமா!'' என்று ஏங்கிக் கேட்டார் ஆதிசேஷன்.

"ஆமாம்'' என்றார் எம்பெருமான்.

''எதற்குப் பிரபூ!''

''உலகில் நாஸ்திக வாதம் மிஞ்சிவிட்டது; விதண்டா வாதமும் எல்லை கடந்து விட்டது. அவற்றுக்கு ஒரு எல்லை கட்ட வேண்டும். அஞ்ஞான இருளை ஞான ஒளியால் கிழிக்க வேண்டும்."

''பிரபூ! அதற்குத் தாங்களே சாஸ்திரம் பண்ணி இருக்கிறீர்களே. பகவத் கீதையை விட எது அஞ்ஞான இருளைக் கிழிக்க முடியும்?''

"ஆம் சாஸ்த்ரம் செய்தேன். அப்போது நீ கூடத்தான் வந்திருந்தாய் என் அண்ணுவாக".

இப்படிச் சொன்ன பெருமான் புன்முறுவல் கொண்டான். "கீதையைவிட சிறந்த சாத்திரமான திருப்பாவையை பிராட்டி செய்தாள். அவளுக்கும் அண்ணுவாஞய் ராமாநுஜ ஞனி" என்று சொன்ஞன் எம்பெருமான்.

"ஆண்டாள், 'எம் அண்ணுவே!' என்று அழைத்ததால் அண்ணுவாலேனே தவிர உண்மையில் பின்ஞல் தானே பிறந்தேன்" என்ருன் ஆதிசேஷன்.

"எப்படியோ எனக்கும் அண்ணுவாஞய் ; பிராட்டிக்கும் அண்ணுவாஞய்"

"இன்ஞம் யாருக்கு அண்ணுவாக வேண்டும்?" என்று கவலையுடன் கேட்டான் ஆதிசேஷன்.

"உலகத்துக்கு; அஞ்ஞான இருளில் மூழ்கியிருக்கும் ஜனங் களுக்கு ஞானஒளியளிக்க அண்ணுவாக மீண்டும் போய்வா!" என்ருர் பகவான்.

"ராமாநுஜஞனேன், மணவாள மாமுனியானேன். அந்த அவதாரங்களில் சொல்லாததை இப்பொழுது மட்டும் என்ன சொல்லி விடுவேன்?"

"அப்போது சாஸ்த்ர ஜ்ஞானமுள்ளவர்கள் பெருகியிருந் தார்கள். உனது சாஸ்த்ரங்கள், வாதங்கள் புரிந்தன அவர் களுக்கு. இப்போது புரிந்தது போல் எதையும் வாதாடும் ஜனங்கள் பெருகி விட்டார்கள். ஆகவே கங்கையும் காவிரியும் போல உள்ள ஸம்ஸ்க்ருத த்ராவிட மஹா க்ரந்தங்களை சமந் வயப்படுத்தி, இணைத்து மக்களுக்குத் தெளிவாகச் சொல்லி விட்டுவா".

இதைக்கேட்ட ஆதிசேஷன் சிந்தாக்ராந்தனுன். "ப்ரபூ! உங்களைவிட்டு நான் எப்படிப் போவேன்?" என்று துக்கத் துடன் வினவினுன் ஆதிசேஷன்.

"ஆதிசேஷா! உன்னைவிட்டு என்னுல் மட்டும் பிரிய முடியுமா? நீ இருக்குமிடத்தில் நானும் இருப்பேன். நீ எங்கெங்கு வேத திவ்யப்ரபந்த விசாரம் செய்து மக்களை பக்தி வேகத்தில் ஆழ்த்துகிருயோ அங்கெல்லாம் நானுமிருப்பேன்".

"அங்கு எங்கிருப்பீர்கள் ப்ரபூ? நான் சேவிக்க இயலுமா?" என்று ஆதிசேஷன் கேட்டான்.

"அர்ச்சாவதாரங்களை சேவிக்கலாம். என்னை சேவிக்க முடியாது!

"என் ப்ரபூ! நான் அத்தனை அபாக்யவானு?"

"இல்லை; நானிருக்குமிடத்தை நீ பார்க்க முடியாது".

"அப்படிப்பட்ட இடம் எது ப்ரபூ?"

பகவான் ஆதிசேஷனை உற்று நோக்கினுர் கருணையுடன். "உன் நாவில் இருப்பேன். வடமொழி வேதங்களும் தமிழ் வேதங்களான திவ்யப்ரபந்தங்களும் அருளிச் செயல்களும் உன் நாவிலிருந்து உதிரும். அந்த ரசத்தை நானும் அனுபவிப் பேன். உன் பேச்சு என் பேச்சாகும். நான் மயர்வற மதி நலம் அருளியதைப் போல் நீயும் நல்லறிவு ஊட்டப் போகி ருய். சாஸ்த்ரவாதிகள் உன்னைப் பார்த்து மகிழ்வார்கள். பிரதிவாதிகளுக்கு நீ பயங்கரமாகத் தோன்றுவாய்" என்று பகவான் அருளிச்செய்து கையை ஆதிசேஷன் மீது வைக்க ஆதிசேஷன் அந்தர்த்தானமானுன்.

காஞ்சியில் பிரதிவாதி பயங்கரர் குடும்பத்தில் ஒரு குழந்தை வீறிட்டு அழுது கொண்டே பிறந்தது. அதற்கு அண்ணு என்று பெயரிட்டார்கள். உலகத்துக்கு ஒரு அண்ணு பிறந்தார். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு ஒரு ஜகதாசார்யர் தோன்றினுர்.

# கேள்வி பதில்

காவல் கழனி ஸ்ரீநிவாஸன்

கே: பகவானின் இருதிருவடிகளான திருமணை கோவில் களில் பகவானுக்கே அணிவிப்பதன் நோக்கம் என்ன?

ப: பக்தர்கள் விரும்பும் எதையும் பகவானும் விரும்பு கிறான். பக்தர்கள் மகிழ்ச்சிக்காகவே எதையும் செய்கிறான். அவன் ஆடைகளணிவதும் ஆபரணங்கள் பூணுவதும் பக்தர் களின் மகிழ்ச்சிக்காகவே. அதுபோலவே பக்தர்கள் உகந்து அணியும் திருமண்காப்பைத் தானும் உகந்து அணிகிறான்.

ராஜகோபாலன் பாம்பே

கே: ஸ்ரீவைஷ்ணவர்கள் பெயருக்கு முன்னால் இடும் அடைமொழியான உ. வே. என்பதன்விளக்கம் என்ன?

ப: உ.வே. என்பது உபயவேதாந்தாங்கள் என்பதைக் குறிக்கும். அதாவது ஸ்ரீவைஷ்ணவர்கள் உபய (இரண்டு) வேதாந்தங்களையும் இரண்டு கண்களாகவுடையவர்கள். இரண்டு வேதாந்தங்களாவன: ஸம்ஸ்க்ருத வேதாந்தங் களும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களான திவ்யப்ரபந்தங் களும். "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்" என்பர் திருமங்கையாழ்வாரும்.

N. V. வெங்கடவரதன் சென்னை-88.

கே: சூரியகுலத்தில் அவதரித்த ஸ்ரீராமபிரானுக்கு 'இராமச்சந்திரன் என்ற திருநாமம் வரக்காரணம் என்ன?

ப: சூரிய குலத்திலுதித்தவர்களிலேயே ஸ்ரீராம பிரான், சந்திரனைப் போன்று அனைவரையும் மகிழ்வித்த காரணத்தால் ராமசந்திரன் எனப்பட்டான்.

# காஞ்சீ மஹான்

ஸ்ரீ உ. வே. ஸ்ரீரங்கம் குண்டலம் R. திருமலாசாரியார்

காஞ்சியில் வருடந்தோறும் நடைபெறும் வரதராஜனின் வைசாகோத்ஸவம் அனைவரும் அறிந்ததே. அதுபோல கடந்த 28 வருடங்களாக வருடம்தோறும் நடைபெற்றுவரும் பங்குனி விசாகோத்ஸவமும் (ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் அவதாரத் திருநாள்) அனைவரும் அறிந்த உத்ஸவமாகும். இவ்வுத்ஸவத்தின் நாயகரான ஸ்வாமி இந்த இருபதாம் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த தவப்பயனாவார்.

நம்முடைய வேதங்கள் பற்றிய ஆராய்ச்சிகளில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வருவதுடன் தனக்கே உரிய முறையில் அபூர்வமான விளக்கங்களை வெளியிட்டிருக்கிறார். வேதபாஷ்யங்களிலும் பதபாடங்களிலும் காணப்படும் சில குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டிய தைரியமும் பெருமையும் இவர் ஒருவருக்கே உண்டு.

நமது ஸம்ப்ரதாயத்தைப் பற்றி ஆயிரக்கணக்கான உபந்யாஸங்களும் புத்தகங்களும் வெளியிட்டு நம் ஸம்ப்ரதாயத்தை வளர்த்து வருகிறார். இதற்கு ஆகும் செலவைப் பற்றியோ பணத்தைப் பற்றியோ ஒருநாளும் கவலைப்படுவதில்லை. விழித்திருக்கும் நேரமெல்லாம் இத்தொண்டைப் பற்றியே நினைப்பு. இதுவரையில் காபீ தேனீரை ருசி பார்த்தது கிடையாது.

88 வயதானாலும் பணியில் தளர்ச்சி இல்லை. தன்னம்பிக்கை அதிகம். ஏற்ற பணியை அடிமுதல் நுனிவரையில் தானே செய்வார். இன்றைக்கும் பன்னிரண்டு திருமண் காப்புகளும், திருமணித் தாவடங்களும் இல்லாமல் இவரை ஸேவிக்கவே முடியாது. இவைகளுடனே இவர் அவதரித்தார் போலும் என்று எண்ணத் தோன்றும். புன்சிரிப்பு பூத்த முகத்துடன் குழந்தையானாலும் முதியவரானாலும், எவ்வளவு உயர்ந்தவரானாலும் மனம் குளிரப் பேசுவார்.

வாதம் புரிவதில், மாற்றாரின் பலம் அறிந்தே, அதைக் கழித்து, பிறகே உண்மையான முடிவைத் தன் பலம் கொண்டு நிலைநாட்டுவார். இதனால் இவர் தோன்றிய குலப்பெயரான "பிரதிவாதி பயங்கரம்" என்ற விருதுக்கு நூற்றுக்கு நூறு பொருத்தமானவராக விளங்குகிறார். பல விருதுகளும் அரசாங்க மதிப்பும் இவரை நாடி வந்து சிறப்புறுகின்றன.

இந்தத் தள்ளாத நிலையிலும் வரதன் உத்ஸவங்களில் கைங்கர்யம் செய்வதையும் வைணவத் தொண்டை சிறிதும் விடாமல் செய்து வரும் மனோபலம் படைத்துள்ளார். ஸ்ரீவைஷ்ணவர்களின் பெயருக்கு முன் வழங்கி வரும் "ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யோபய வேதாந்தாசார்யர்" என்ற அடைமொழி இக்காலம் இவர் ஒருவருக்கே உரித்ததாகும். பிறருக்கு இது உபசாரமான சொல்லாகவே ஆகும்.

இருபதாம் நூற்றாண்டில் வசிக்கும் நாம் பெரும் தவம் செய்தவர் எனப் பெருமை கொள்ளலாம் — இவருடன் கூடி வாழப் பெற்ற பாக்யத்தாலேயே. ஸ்ரீரங்கநாச்சியார் இவருக்குத் தொடர்ந்து ஆயுளையும் சக்தியையும் கொடுத்து தன் பணியை இவர் மூலம் மேலும் வளர்க்கப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ உ. வே மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியைப் பற்றி ஸ்ரீமத் பரமஹம்ஸ த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமி ஒரு சமயம் இப்படி குறிப்பிட்டார்: "நம் ஸ்வாமி ஸாதித்துள்ள சாதனைகள் அமானுஷ்யமானவை அவர் எழுதியுள்ள நூல்கள் அளவிறந்தவை இனிமேல் அவ்வளவு நூல்களை யாரும் எழுதவே முடியாது. ஏன்? புதிதாக யாரும் எழுத வேண்டாம் அவர் எழுதியுள்ள நூல்களை ஒருவர் இப்போது மீண்டும் கையால் எழுதத் தொடங்கினால் அதற்கே ஒரு மனித ஆயுள் போராது. அவ்வளவு நூல்களையும் சொந்தமாக நம் ஸ்வாமி எப்படித்தான் எழுதினாரோ! ஸ்வாமி பதிப்பித்துள்ள நூல்களையெல்லாம் அடுக்கினால் அவை பரமபதம்வரை படிக்கட்டுபோல செல்லும் இதை அமானுஷ்ய சக்தி என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது"

---

ஸ்ரீவைஷ்ணவ உலகத்திற்குப் பரமோபகாரத்தைச் செய்தருளிய ஜகதாசார்யரான நம்பிள்ளையின் திருவதாரமே ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதியாயெழுந்தருளியிருக்கிற காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி என்னும் விஷயம் உலகறிந்ததேயாம். நம் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்வாமி உபந்யாஸங்களிலும், பெரியவாச்சான் பிள்ளையைப் போலவே உபகரித்த திவ்யார்த்த தீபிகை என்னும் அருளிச்செயல் வ்யாக்யானங்களிலும், பஞ்சஸ்தவம் முதலான ஸ்தோத்ர வ்யாக்யானங்களிலும், ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கும்படி பாக்யம் பெற்றுள்ள ஸ்ரீ ஸ்வாமியின் அவதாரத்தன்மை ப்ரத்யக்ஷ ஸித்தம்.

காரப்பங்காடு வெங்கடச்சாரியர் ஸ்வாமி.

# ஒரு நற்செய்தி

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் திவ்ய ஸூரிகளான ஆழ்வார்களால் திவ்ய பிரபந்தங்களின் வாயிலாகப் பாடப் பெற்ற தலங்களை திவ்யதேசம் என்று வழங்குகிறார்கள். "விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று மடக்கிளியை கைக்கூப்பி வணங்கினாளே" என்கிற படி நமது ஆசிரியர் ஸ்ரீமான். உ. வே. M. A வெங்கட கிருஷ்ணன் அவர்களிடம் திவ்யப்பிரபந்தம் கற்கும் சிறுவர் களை, திவ்ய தேசங்களிலும், ஆழ்வார், ஆசாரியர்களின் திரு அவதார ஸ்தலங்களிலும் திவ்யப்பிரபந்த கோஷ்டிகளில் கலந்துகொள்ளச் செய்யவேணும் என்று லௌகிகத்திலுள்ள பலர் காளயுக்தி வருஷம் வைகாசி மாதத்தில் முடிவெடுத் தார்கள். அவ்வமயம் தலைமை வகித்த ஸ்ரீமான் P. B. அநந்தா சாரியர் ஸ்வாமி (Advocate) இச் சங்கத்திற்கு **'அருளிச்செயல் அன்பர் அவை'** என்று பெயரிட்டு அனைவரையும் மகிழ்வித்தார்.

இச் சங்கத்தின் முதல் விழாவாக (7-6-78) புதன்கிழமை எம்பெருமானாரின் முதல் திருவாதிரை புறப்பாட்டில் பல இளைஞர்கள், சிறுவர் குழாத்துடன் கலந்து கொண்டனர். ஸ்ரீமத் பரமஹம்ஸ யதீந்த்ர ப்ரவண யதிராஜ ஜீயர் ஸ்வாமி இவ்வவையை 'வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று வாழ்த்தி யருளினார்.

அடுத்து பெருமாள் கோவிலில் (8—8—78 அன்று) திருவாடிப்பூர ஊர்கோல உத்ஸவத்தில் கலந்து கொண்டார் கள். அவ்வமயம் ஸ்ரீ. உ. வே. மஹா வித்வான் P B. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி அருளாளன் பேர் பாடும் அடியார் குழாம் பொலிக! பொலிக! என்று அநுக்ரஹித்தார்.

தொடர்ந்து (8—10—78 அன்று) திருவயிந்திரபுரத்தில் புரட்டாசித் திருமூலத் திருநாளில் மணவாள மாமுனிகள் ஸந்நிதியில் உபதேசரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி ஆகிய இரு பிரபந்தங்களையும் விண்ணப்பம்,

மணனும் அதிர ஸேவித்தார்கள். இயற்பா ஆயிரம் கற்று முடித்த சிறுவர்களுக்கு. இடையில், இயற்பா அவதரித்த இடமான திருக்கோவலூர் எம்பெருமான் ஸேவையும் கிடைத்தது பரம பாக்கியமே. (3—12—78 அன்று) திருநீர்மலை எம்பெருமானின் வனபோஜன மஹோத்ஸவ கோஷ்டியில் பங்கு கொண்டார்கள்.

இச் சங்கத்தின் அருளிச் செயல் கைங்கர்யத்தினால் உளமுவந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி சின்ன ஜீயர் ஸ்வாமி 'வெறிதே அருள் செய்வர்' என்றபடி திருமோகூர் ஸம்ப்ரோக்ஷணத்தை வ்யாஜமாக வைத்து இச் சபையிலுள்ள அருளிச் செயல் வல்லார்களையும், அருளிச் செயல் பயில்பவர்களையும் அரங்கன் பூபதித் திருநாளில் திவ்யப்பிரபந்த கோஷ்டியில் கலந்து கொள்ளச் செய்தருளினார். தொடர்ந்து திருமோகூர் ஸம்ப்ரோக்ஷணத்திலும் அந்வயித்ததை சென்ற இதழில் விவரமாகக் கண்டோம்.

திருப்புட்குழி தேவஸ்தானத்தின் அழைப்புக்கிணங்க சென்ற 23—2—79ல் கருடோத்ஸவப் புறப்பாட்டில் கலந்து கொண்டு அவ்வூரார் அனைவரையும் மகிழ்வித்தனர். அன்றே திருக்கடிகை (சோளசிங்கபுரம்) அக்காரக்கனி எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து, திருப்புகாலையில் பேருளாளன் பெருந்தேவித்தாயார் இரட்டைப் புறப்பாட்டிலும் கலந்து கொண்ட விசேஷம் வாசாமகோசரம்.

இப்படியாகப் பல திவ்ய தேசங்களிலும் இச்சபையை ஆதரித்த மஹான்களுக்கு எங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வண்ணமே மேலும் பல திவ்ய தேசங்களில் அருளிச்செயல் கோஷ்டிகளில் அந்வயிக்கும் பாக்கியம் ஏற்படவேணுமென்று பிரார்த்திக்கிறோம்.

T. T. V. திருமலை

# இன்னும் ஒரு நூற்றாண்டிரும்!

## ஸ்ரீ ஊலோகம் ஸ்தலசயனத்துறைவார்

**இவர் ஆர் கொல்!:** என் நண்பர் ஒருவர். மிகவும் பிடிவாதக்காரர். வீட்டை விட்டு வெளியில் வரமாட்டார். அன்று திருவாதிரை! அவரை ஸ்ரீபெரும்பூதூருக்கு வற்புறுத்தி அழைத்தேன். அவரும் எப்படியோ வர இசைந்து விட்டார். 'அமுதமாயினும் தனித்து உண்ணக் கூடாது' என்பது பெரியோர் கொள்கை. நான் எம்பெருமானாரின் ஸௌந்தரியத்தை ஸேவித்து மகிழ்வது போல் அவரும் மகிழ வேண்டும் என்பதே என்னுடைய ஆசை! அவரும் வைத்த கண் வாங்காமல் எம்பெருமானாரை ஸேவித்துக் கொண்டிருந்தார். 'இத்தனை நாட்களாக ஸ்ரீராமாநுஜரை ஸேவிக்காமல் இருந்து விட்டேனே! பழுதே பல பகலும் போயினவே!' என்று நினைத்து வருந்தினார். அதுமுதல் நினைத்தபோதெல்லாம் சென்று எம்பெருமானாரை ஸேவித்து வருவார். எம்பெருமானாரின் திருமேனி ஸௌந்தர்யம் அத்தகையது! நம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியும் அப்படிப்பட்டவரே. நம் ஸ்வாமியை நேரில் ஸேவித்தவர்கள் பலர். அவரது பெயரை மட்டும் அறிந்தவர்கள் மற்றும் பலர்.

நேரில் ஸேவித்தவர்கள் வியக்கிறார்கள்! காலக்ஷேபங்களைக் கேட்டவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். 'இப்படிப்பட்ட மஹானை எம்பெருமான் எப்படித் தோற்றுவித்தான்! அவனே அவதரித்தானோ! இல்லை ... ஆழ்வார்களுள் ஒருவரோ! எம்பெருமானாரோ! விசதவாக் சிகாமணியான மணவாள மாமுனிகளோ! இன்னாரென்று அறியோம்' என்கிறார்கள். இவரார் கொல்?

**நம் சடகோபனோ':** நம்மாழ்வார் திருவிசாகத்தில் அவதரித்தார்!; நம் ஸ்வாமியின் திரு நக்ஷத்திரமும் திருவிசாகம்.

ஆழ்வார் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகிய நான்கு திவ்வியப் பிரபந்தங்களை மட்டும் அருளிச் செய்தார்; நம் ஸ்வாமி அப் பாசுரங்களின் நுண்ணிய கருத்துக்களை பல்வகைப் பிரமாணங்களோடு (அருளிச் செய்து வருகிறார்) எடுத்துக் கூறி வருகிறார். ஆழ்வார் புறசமயவாதிகளாகிற யானைகளை அடக்கும் அங்குசம் போன்றவர்; பராங்குசர். நம் ஸ்வாமி 'பிரதிவாதி பயங்கரர் !'

**பொய்கைப்பிரானே ! :** பொய்கையாழ்வார் திருக்கச்சி மாநகரில் அவதரித்தார். ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமானிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர். நம் ஸ்வாமியும் காஞ்சிபுரத்தில் அவதரித்தவர். ஸ்ரீயதோக்தகாரி எம்பெருமானிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவருக்குக் கைங்கரியம் செய்வதில் பெரு மகிழ்ச்சி ! விசேஷ காலங்களில் அந்த எம்பெருமானுக்குக் கட்டியம் முதலானவை ஸேவிக்கும் போது வன் பொன்னிப் பேராறு போல் கண்ணீர் பெருக்கிக் கொண்டு பகவத் விஷய அமுதத்தைப் பருகித் திளைப்பதைக் காணலாம்.

**கடல் மல்லைப் பூத்தாரே ! :** கடலலைகள் முத்துக்களைக் கடல் மலையில் கொண்டு வந்து சேர்க்கும். பூதத்தாராகிய சிறந்த முத்தினைக் கடல் மல்லையில் சேர்த்தது ! பூதத்தார் அவதரித்த இடம் (திருக்கடல் மல்லை) மாமல்லபுரம். அவர் எம்பெருமானின் கல்யாணக் குணங்களையே எப்போதும் கூறி ஸத்தை பெற்றவர். அவர் அத்திகிரியில் வாழும் ஸ்ரீதேவப் பெருமாளையே 'இறையாவான் ; எங்கள் பிரான்' என்று அறுதியிட்டுக் கூறினார்.

காஞ்சிபுரமும் மஹான்களாகிற சிறந்த முத்துக்களைக் கொடுத்துப் பெருமை பெற்று விளங்குகிறது. நம் ஸ்வாமி ஒளியுள்ள வெண்முத்து ! விலைமதிப்பைக் கடந்த சிறந்த முத்து ! ஸ்ரீதேவப் பெருமாளின் திருவருளால் தோன்றிய

மூத்து! பூதத்தார் கூறிய சொல் பின்பற்றித் தேவப் பெருமாளையன்றித் 'தேவுமற்றறியேன்' என்ற நிலையை அநுஷ்டித்துக் காட்டுபவர் நம் ஸ்வாமி!

**திருக்கண்ட பேயாழ்வாரோ!:** பேயாழ்வார் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்றவர். லக்ஷ்மீ கடாக்ஷத்தைக் கொடுக்கும் திருவந்தாதியைத் 'திரு' என்னும் சொல்லால் தொடங்கித் 'திரு' என்ற சொல்லால் முடித்துக் கொடுத்தவர். 'திருக்கண்டேன்' என்று பரதத்துவத்தையும், 'தாள் முதலே நங்கட்குச் சார்வு' என்று அவன் திருவடிகளே நமக்குத் தஞ்சம்' என்பதையும், அவன் திருவடிகளில் செய்யும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்றும் காட்டினார். அதை அநுஷ்டிப்பவர் நம் ஸ்வாமி. குறிப்பாக, 'வினை தீர்க்கும் மருந்தாக விளங்குபவன (யதோக்தகாரி) திருவெஃகா எம்பெருமான்! மலரிட்டு அவனை வணங்கினால் தீவினைகளே நம்மை நெருங்கா' என்பதை 'விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க் கைதொழுதால் அஃகாவே தீவினைகளாய்ந்து' என்று விளக்கிக் கூறினார். பேயாழ்வார் அருளியபடியே ஸ்ரீ யதோக்தகாரி எம்பெருமானை வணங்கி வந்தித்துவாழ்த்துபவர் நம் ஸ்வாமி.

**துய்ய மதி பெற்ற மழிசைப்பிரானோ!:** ஸுதர்சனாழ்வானே திருமழிசைப் பிரானாக அவதரித்தார். 'உருவின வாளை உறையிலிடாதவர்' என்று இவரை ஆசாரியர்கள் கொண்டாடுவார்கள். தத்துவ உபதேசங்களினால் எதிரிகளின் வாதங்களை முறியடித்துப் பரதத்துவ நிர்ணயம் செய்வதையே பொழுதுபோக்காகக் கொண்டவர் இவர். எதிரிகளை அழிக்க வாளை உருவிய அரசன், எதிரிகளை அழித்து முடிக்கும் வரை வாளை உறையில் இடமாட்டானன்றோ!

பொய்யே மெய்ம்மை சொல்லித் திரியும் அபார்த்த வாதிகளின் வாதங்களை நிரஸிக்கக் கையில் எழுதுகோலை எடுத்த நம் ஸ்வாமி இன்று வரை அதைக் கீழே வைக்கவில்லை. 'உருவிய வாளை உறையிலிடவில்லை.'

இவ்வாழ்வார் சொல்லியபடி எல்லாம் சயனத் திருக் கோலத்திலுள்ள எம்பெருமான் நடந்து கொண்டான் திரு மழிசைப் பிரான் சொன்ன வண்ணம் செய்தவன், ஸ்ரீயதோக்த காரி எம்பெருமான் நம் ஸ்வாமியின் வேண்டுகோளை ஏற்று ஆண்டுதோறும் ஸ்ரீ நம்பிள்ளை சாற்றுமறையை நடத்திக் கொடுக்க நம்பிள்ளை ஸன்னிதிக்கு எழுந்தருளுகிறார்.

**குலசேகரப் பெருமாளோ !:** குலசேகராழ்வார் அரச குலத்திற்கே சிரோபூஷணமாக விளங்கியவர். பெருஞ் செல் வத்தை அடியார்களுக்கே செலவிட்டவர்; செல்வத்தையே வெறுத்தவர். ஸ்ரீ ராமாயணத்திலும், ராமனிடத்திலும் மனதை ஊன்றியவர். 'மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா நீ ஆளாவுனதருளே பார்ப்பனடியேனே' என்று பகவானின் திருவருளையே எதிர்பார்த்து வாழ்ந்தவர், நம் பெருமாளிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர்.

நம் ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவ குலத்திற்கே சிரோபூஷண மாக இருப்பவர். பல ஸந்தர்ப்பங்களை ஏற்படுத்தி ஸ்வாமிகளை வரவழைத்துத் தன் செல்வங்களை அவர்களுக்கு வழங்குபவர். 'படி கொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பத்தி வெள்ளம் குடி கொண்ட கோயில்!' என்று கொண்டாடப்படுகிறவர். திருமேனி சக்தமாயினும் அசக்தமாயினும் தேவப் பெருமா ளின் திருவருளையே எதிர் பார்த்து இருப்பவர். நம்பெருமாளை யும், திருவேங்கடவனையும் அடிக்கடி ஸேவித்து மகிழ்பவர்.

**நம் பட்டர்பிரானோ !:** பட்டர்பிரானே பெரியாழ்வார். இவர் விஷ்ணுசித்தர். ஸ்ரிய: பதியான எம்பெருமானை சித் தத்தில் (உள்ளத்தே) கொண்டிருப்பவர். பல்லாண்டு பாடு பவர்; மங்களாசாஸனபரர். வேண்டிய வேதங்களோதி பரதத்துவ நிர்ணயம் செய்தவர். ஸ்ரீவில்லிபுத்தூர் கோபு ரத்தை எழுப்பியவர். இவரது நக்ஷத்திரம் ஸ்வாதி.

பகவான் மனத்துள்ளான் ; மாகடல் நீருள்ளான் ; மல ராள் தனத்துள்ளான். அடியார்களின் உள்ளத்திலும் யோகிகளின் உள்ளத்திலும் வாழ்வது போல் நம் ஸ்வாமியின் உள்ளத்திலும் வாழ்கிறான். தேவப் பெருமாள் திருவீதிப்புறப் பாடு கண்டருளப் புறப்படும் போதே திருப்பல்லாண்டு தொடங்குபவர் நம் ஸ்வாமி தான் ! மங்களாசாஸனம் செய் வதில் ஊற்றமுடையவர். ஆங்காங்கு பகவத்குணங்களை எடுத்துச் சொல்லுவதால் பெற்ற செல்வத்தைக் கொண்டு ஸ்ரீநம்பிள்ளை ஸன்னிதியை எழுப்பியவர். நம் ஸ்வாமி விசாக நக்ஷத்திரமாயினும், ஆழ்வாரையும் இவரையும் ஒரே ராசிக்கா ரர் என்று கூறலாம். நம் ஸ்வாமி வேதமோதியவர்களுள் சிறந்தவர்.

**தொண்டரடிப்பொடி எம்பெருமானே !** : இவ்வாழ்வார் நான் மறையோர்களால் கொண்டாடப்படுகிறவர். பகவா னுக்குத் தொண்டு செய்பவர். துளபத்தொண்டாய தொல் சீர்த் தொண்டரடிப் பொடி எம்பெருமான் திருமாலை பாடி யவர். ரங்க ராஜனைத் துயிலெழுப்பியவர்.

நம் ஸ்வாமியும் ஸ்ரீவைஷ்ணவர்களால் (பக்தர்களால்) கொண்டாடப் படுகிறவர். கைங்கரியமாகிற புருஷார்த் தத்தைப் பெற்றவர். துளசி நளினாக்ஷ மாலைகளை அணிந்திருப் பவர், எப்போதும் திருமாலை (ஸ்ரீமந் நாராயணனை)ப் பாடிப் புகழ்பவர். பல்லாண்டுகளாகத் தேவப் பெருமாள் ஸன்னிதி மாடவீதிகளில் (சிற்றஞ்சிறு காலே எழுந்து) வேதம் வல்லார்களோடு வேதபாராயணம் செய்து கொண்டு வரும் செயலால் ஸ்ரீதேவராஜனை (தேவப் பெருமாளை)த் துயிலெழுப் பியவர். அனேகம் திவ்ய தேசங்களுக்கு ஸுப்ரபாதம் இயற் றித் தந்தவர்.

**பாட்டினால் பரமனைக் கண்ட திருப்பாணரே !**: இவ்வாழ் வார் விடிவோறே எழுந்திருந்து பகவானைத் தியானிப்பார்.

கல்லும் கரையுமாறு உள்ள முருகப் பாடிப் பகவானைத் தானிருக்கும் இடத்திலேயே வரவழைத்து வணங்குவார். அடியார்களுக்கு அடியாராகவே தன்னைக் கூறிக் கொண்டார். அரங்கனை ஆபாத சூடம் ஸேவித்து மகிழ்ந்தார்.

நம் ஸ்வாமியும் அதிகாலையில் எழுந்திருந்து பகவானின் திருக்குணங்களையும் பெருமைகளையும் ஆழ்ந்து எழுதிக்கொண்டிருப்பார்; ஸ்ரீவைஷ்ணவ தாஸர். பலமுறை திருவரங்கத்திற்கு எழுந்தருளி அரங்கத்தமுதினை ஆபாத சூடம் ஸேவித்து மகிழ்ந்தவர். ஸ்வாமி, பாசுரங்களையும் அர்த்தங்களையும் அனுபவிக்கும்போது எம்பெருமானும் யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் எதிரில் வந்து நின்று கேட்டு மகிழ்வான.

**திருமங்கை மன்னனே!:** திருமங்கையாழ்வார் பல இடங்களுக்கு எழுந்தருளி எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தவர். ஆசு கவி, மதுர கவி, சித்திரகவி, விஸ்தாரக் கவிகளை இயற்ற வல்ல நாலுகவிப் பெருமாள்! மற்றவர்களுக்கு இல்லாத தனிப் பெருமை இவ்வாழ்வாருக்கு உண்டு. வெற்றிவேற் பரகாலன் கலியன் என்று தன்னைக் கூறிக் கொள்வார். தேவப் பெருமாள் இவ்வாழ்வாருக்குக் காஞ்சிபுரத்தில் நிதியைக் காட்டிக் கொடுத்தார். ஆழ்வாரின் பாடல்கள் நெஞ்சுக்கு இருள் கடி தீபம்! நெடும் பிறவி நஞ்சுக்கு நல்ல அமுதம்! பரசமயப் பஞ்சுக்கு அனலின் பொறி! எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்துக்கும் இலக்கியம்!

நம் ஸ்வாமியும் திவ்ய தேச யாத்திரையாகப் பலமுறை எழுந்தருளி எம் பெருமான்களை மங்களாசாஸனம் செய்திருக்கிறார். ஸம்ஸ்க்ருத மொழியிலும், தமிழ் மொழியிலும் சுருக்கமாகவும் விவரமாகவும் மதுரமான கவிதைகளை இயற்ற வல்லவர். ஒப்புயர்வற்ற "மஹாமஹோபாத்யாய" பட்டத்தைப் பெற்றவர்.

ஸ்வாமி பல கிரந்தங்களை எழுதி இருக்கிறார். ஒவ்வொன்றும் அறியாமையை நீக்கும் விளக்கு! நல்ல அமுதம்! இவர் எழுதிய கண்டன நூல்களெல்லாம் ஆழ்வாராசார்ய விரோதிகளாகிற பஞ்சுக்கு அனலின் பொறி! காஞ்சீபுரத்தில் ஸ்ரீதேவப் பெருமாளையே (ஸ்ரீ நிதியையே) பைதாமஹம் தனமாகப் பெற்று வாழ்பவர்.

**சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே!:** வேதமனைத்துக்கும் வித்தாகிய திருப்பாவையை ஆண்டாள் அருளிச் செய்து கொடுத்தாள். எம்பெருமானிடம் வேறு ஒன்றையும் விரும்பாமல் 'உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று அவனது திருவுள்ளத்தை உகப்பிக்கும் கைங்கர்யத்தையே பிரார்த்தித்துப் பெற்றாள்.

நம் ஸ்வாமியும் மார்கழி மாதத்தில் 'இன்பத்தேன் வந்து பாய்வது போல்' திருப்பாவை காலக்ஷேபம் ஸாதிப்பார். ஒவ்வொராண்டும் புதிய புதிய கருத்துக்கள்! திருப்பாவையைப் பற்றிப் பல முறை எழுதி இருக்கிறார்! புத்தம் புதிய சுவைச் செய்திகள் நிரம்பி இருக்கும். கைங்கர்யத்தில் தவன்றியவர். கோஷ்டிக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தாலே தன்னாமை நீங்கி விடும். உனக்கே நாமாட் செய்வோம் என்ற உறுதி கொண்டவர் நம் ஸ்வாமி!

**நம் இராமாநுசனை!:** எம்பெருமானார் நவகிரந்தங்களை அருளியுள்ளார். சாருவாகம் முதலிய ஆறுசமயங்களை அழித்துள்ளார். திருவரங்கம் தொடங்கித் திருப்பதரி வரை சிஷ்யர்களோடு யாத்திரையாகச் சென்று விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்தார். திருநாராயணபுரத்தில் கோயிலைக் கட்டி திருநாரணனைப்பிரதிஷ்டை செய்தார்.

நம் ஸ்வாமியும் பல மொழிகளில் நவ (புதிய புதிய) கிரந்தங்களை இயற்றியுள்ளார். கால க்ஷேபத்தினாலும், நூல்

வெளியிடுகளாலும் காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறுவகையான பகைகளையும் அழிப்பவர். சிஷ்யர்களோடு கோஷ்டியாகப் பலமுறை பதரியாத்திரை சென்று எம்பெருமானுரின் பெருமைகளை விளங்கச் செய்தவர். மஹான்களாகிற ஹாரத்திற்கே நடு நாயக மணியாக விளங்குபவர். திருவாய் மொழிக்கு உரையாகிற ஈட்டின் சுவையை அறிந்தவர்கள் ஸ்ரீ நம்பிள்ளைக்கு ஒரு கோயில் கட்டவேண்டும் என்று சொல்லுவார்கள். நம் ஸ்வாமி 'தேவப்பெருமாள் ஸன்னிதி வீதியில் ஓரழகிய கோயிலைக் கட்டி ஸ்ரீ நம்பிள்ளையோடு பெரியவாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளையையும் பிரதிஷ்டை செய்து அன்பர்களின் உள்ளத்தை மகிழ்வித்துள்ளார்.

**இன்னும் ஒரு நூற்றுண்டு இரும்:** ஸ்ரீமணவாள மாமுனிகள் மிகவும் சாந்த ஸ்வபாவமுடையவர். விசத வாக் சிகாமணி! ஆசார்ய லக்ஷணங்கள் நிரம்பி, அரங்கனும் வரிக்கத்தக்க ஆசாரியராக விளங்கினுர். மணவாள மாமுனிகளால் பகவத் விஷயம் ப்ரசாரம் ஆயிற்று!

நம் ஸ்வாமியும் சாந்த சம தமாதி குணங்களைக் கொண்டவர்; கல்விக்கடல்! அழகிய சொற்களைக் கூறுபவர். ஆசார்ய லக்ஷணங்கள் நிரம்பி 'ஐகதாசார்யர்' என்ற பெருமையோடு குறிக்கப் படுகிறவர். பகவத்விஷயத்தைப் பல முறை நூல்களாகப் பதிப்பித்தும் காலக்ஷேபங்கள் ஸாதித்தும் எம்பெருமானின் பரிபூர்ண கிருபையைப் பெற்றவர். ஸ்ரீவைஷ்ணவம் தழைத்தோங்க இன்னுமொரு நூற்றுண்டு வாழவேண்டும் என்று தேசாசாரியன் திருவடிகளில் பிரார்த்திக்கிறோம்.

**'இன்னுமொரு நூற்றுண்டிரும்'**

# ஒரு சந்தேகம்

ஸ்ரீதாசார்யன் பத்திரிக்கை ஆசிரியர் சன்னதியில் அடியேன் வரதராஜன் தெண்டன சமர்பித்த விஞ்ஞாபனம். இப்பவும் மாசி இதழ் படிக்கப் பிராப்தமாயிற்று. அதில் "கோசல நாடுடைவள்ளல்" என்ற தலைப்பிலுள்ள கட்டுரையில் ஒரு சிறு சந்தேகம். தேவரீரோ அல்லது கட்டுரை ஆசிரியரோ விளக்கினால் உண்மை தெளிவு பெறும்.

பெருமாள், சக்கரவர்த்தித் திருமகன், போர்க்களத்தில் வெறுங்கையனாய் நின்ற இராவணனைப் பார்த்து சில வார்த்தைகளைப் பேசுகிறான். அதனைக் கம்பநாடர் "இன்றவிந்தது போலும் உன நிமை" என்று ஆரம்பித்து மேல் ஐந்து பாசுரங்களால் கூறியுள்ளார். கடைசிப் பாடலை "கோசல நாடுடை வள்ளல்" என்று முடிவது "வள்ளல்" என்ற பதத்தால் இராமனுக்கு ஒரு பெருமையைத் தேடித் தரக் கருதி, கவிஞர் கருதாத பொருளைக் கூறிப் போந்தோர் இவ்வாசிரியரேயலர், பலர் உளர். தருகை நீண்ட தசரதன் தந்த இருகை வேழம் தசகரீவனைப் பார்த்துக் கூறுவதாக வந்துள்ள மூன்றாம் பாசுரம் பின்வருமாறு.

"சிறையில் வைத்தவள் தன்னை விட்டு, உலகினில் தேவர்
முறையில் வைத்து, நின் தம்பியை இராக்கதர் முதலபேர்
இறையில் வைத்து, அவற்கு ஏவல் செய்து இருத்தியேல், இன்னும
தறையில் வைக்கிலென், நின்தலை வாளியின் தடிந்து".

இராவணன் எந்த நிலையில் இருத்தல் வேண்டும் என்பதைப் பெருமாள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். இந்தப் பாடலின் பொருளும், வள்ளல் என்ற பதத்திற்குக் கட்டுரை ஆசிரியர் காட்டியிருக்கும் பொருளும் எங்ஙனே பொருந்தும்? சற்று தெளிவாக்கினால் நலம். பின இங்கு கவிச் சக்கரவர்த்தி கோசல நாடுடை வளளல் எனக் கூறு வானேன் எனில், அதற்குப் பொருளே வேறு. அது விரிப்பில் பெருகும். இராவணனுக்கு நாடு கொடுப்பதாக இராமன் எங்குமே சொல்லவில்லை. பின் ஏன் அப்பொருள் மொழிதல் வேண்டும். வாசக தோஷம் க்ஷமிக்கவும்.

**C. P. வரதராஜன், சென்னை-17.**

# தென்கலை வடகலை பற்றி ஸ்வாமி

ஒருமுறை 'கரெண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் நிருபர் ஸ்வாமியிடம் வந்து கேட்டார்: "தற்காலத்தில் வடகலைத் தென்கலை வழக்குகள் அவசியமா? விஞ்ஞானம் முன்னேற்றமடைந்து மனிதன் சந்திரனில் காலடி வைக்கும் நேரத்தில் யானைக்கு எந்த நாமம் போடுவது என்று பல லக்ஷக் கணக்கான ரூபாய்கள் செலவழிதது வழக்காடுவது வீண் விரயமல்லவா?"

இதற்கு ஸ்வாமி மிகவும் சுவையாக பதிலளித்தார்: "எங்களுக்கு அவசியமானவைகளாகத் தோன்றுபவையெல்லாம் உங்களுக்கும் அவசியமாகத் தோன்ற வேண்டிய கட்டாயம் ஏதுமில்லையே அதேபோல் நீங்கள் அவசியமானவைகளாகக் கருதுபவைகளும் எனக்கு அநாவசியமாகவே படலாமல்லவா? நீங்கள் கூறியபடியே பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்களை செலவழித்து சந்திரனுக்குச் சென்று வந்ததனால் என்ன உபயோகம்? எத்தனையோ மக்கள் பசியால் வாடுகிறார்கள் அவர்கள் துயரைத் துடைக்க அவைகளைப் பயன் படுத்தியிருக்கலாமே! என்று எனக்குத் தோன்றலாமல்லவா? என் கருத்து தவறாகவும் இருக்கலாம். என்னுடைய உடைமையை மற்றொருவன் ஆக்ரமித்தால் அதை மீட்பது எனக்கு முக்யமே தவிர மற்றவர்களுக்கல்ல மேலும் தற்காலத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் சின்னங்களுக்காக வழக்காடுவது சரியாகத் தோன்றும்போது நாங்கள் எங்கள் சின்னங்களுக்காக வழக்காடுவது மட்டும் உங்களுக்கு கேலியாகத் தோன்றுவது ஏன்?"

# எந்த வடிவு சிறந்தது?

ஸ்ரீ உ. வே. மஹா வித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

**அண்ணங்கராசாரியர் ஸ்வாமி**

அசோகவனத்திலிருந்த பிராட்டி திருவடி (ஹநுமார்) மூலமாகப் பெருமாளுக்குச் செய்தி சொல்லியனுப்பினள். அதைப் பெருமாளிடம் விண்ணப்பம் செய்யா நின்ற திருவடி, ஜீவிதம்தார யிஷ்யாமி மாஸம் தசரதாத்மஜ ** ஊர்த்வம் மா ஸாந்ந ஜீவேயம்* என்று சொன்னதையும் விண்ணப் பஞ் செய்தான்.

'இனி ஒரு மாத மளவுந்தான் ஜீவித்திருப் பேன், அதற்கு மேல் ஜீவித்திருக்க முடியாது என்று பிராட்டி சொன்ன வார்த்தை. இப்படிச்சொல்லக்கேட்ட பெருமாள் " அப்படியா? என்னைப் பிரிந்த பிராட்டி இன்னமும் ஒரு மாதம் வரை ஜீவித் திருப்பாளா? அப்படி ஒரு மாதம் ஜீவித்திருந்தாளாகில் நீடுழி காலமும் ஜீவித்திருக்க வல்லவளே என்றால் அப்படி ஜீவித்தி ருக்க முடியாது; *[* ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸி தேக்ஷணாம் *] குவளையங் கண்ணியான அப்பிராட்டியை விட்டு ஒரு நொடிப்பொழுதும் ஜீவிக்ககில்லேன் நான்" என்று கூறியிருக்கிறார். இவ்விரண்டு வார்த்தைகளையும் சேர்த்து ஆராயுமிடத்து பிரிவில் தரியாமை என்னும் விஷயத்தில் பிராட்டிக்கு தாழ்வும் பெருமாளுக்கு ஏற்றமும் ஏற்படு கிறதல்லவா? இது கூடுமோ? * அகல கில்லேனிறையு மென்று அலர் மேல் மங்கை யுறை மார்வா* என்று ஆழ்வார் அருளிச் செய்த படி ஒரு நொடிப்பொழுதும் அகல கில்லேன் என்று சொல்லுமவள் பிராட்டியல்லவா? அப்படிப்பட்டவளன்றோ "ந ஜீவேயம் க்ஷணமபி" என்று சொல்ல வேண்டும். அவன் ஊர்த்வம் மாஸாத் ந ஜீவேயம் என்று ஒரு மாதம் பிரிவை ஆற்றியிருக்க முடியும் என்பதும் "ந ஜீவேயம் க்ஷண மபி" என்று க்ஷண காலமும் பிரிவாற்ற கில்லேன் என்று பெருமாள் சொல்லுவதுமாக வான்மீகி முனிவர் வசந வித் யாஸம் செய்திருப்பது நன்றாயில்லையே என்று முற்காலத்தில்

சிலர் பேசிக் கொண்டார்களாம்; அப்பேச்சு நம்பிள்ளை திருச் செவியில் விழுந்து வெகு அற்புதமான பரமார்த்தம் வெளியிட வாயிற்று.

மேலே யெடுத்துக்காட்டிய திவ்ய தம்பதிகளின் வசனங் களை ஆழ்ந்து நோக்கு மிடத்துப் பிராட்டிக்கே பெருமை விளங்கும். எங்ஙனே யென்னில்; பிராட்டியின் திருமேனி யழகைக் காட்டிலும் பெருமாள் திருமேனியழகு மிகவும் குறைந்த தென்பது இங்குத்தெரிய வருகிறது. பிராட்டியின் திருமேனியழகெல்லாம் ஒரு தட்டாய், கண்ணழகு மத்திரமே ஒரு தட்டா யிருக்கையினாலும் அது தானும் * பும்ஸாம் த்ருஷ்டி சித்தா பஹாரி யென்று பேர் பேர் பெற்ற இராம பிரானது ஸௌந்தரியத்திற்காட்டிலும் வீறு பெற்றிருக்கை யாலும் அப்படிப் பட்ட பிராட்டியின் ஒரு நொடிப்போது பிரிவும் ஸஹிக்கத்தக்கதன்று என்பது பெருமாளுடைய திருமுகப் பாசுரத்தினால் [விநா தாம் அஸிதேக்ஷணாம் என்ப தனால்] வெளிவந்து பிராட்டியின் பெருமை நிலை நாட்டி நின்றது. ஒரு மாஸம் பிரிவாற்றியிருப்பேனென்ற பிராட்டி யின் வார்த்தை இதற்குப் பிரதி கோடியாய் பெருமாளைப் பிரிந்து ஒரு மாதம் ஜீவித்திருக்கமுடியு மென்று சொன்ன முகத்தால் பெருமாளுடைய வடிவழகு அவ்வளவு சிறந்த தன்றென்பது காட்டிற்றுகிறது.

இவ்வார்த்தம் எவ்விடத்தில் வெளியிடப்பட்டிருக்கிற தென்னில்; திருவாய்மொழி (6-6-6) * என் விற்புருவக்கொடி தோற்றது மெய்யே * என்றவிடத்து ஈட்டில்.

"ஊர்த்வம் மாஸாத் ந ஜீவிஷ்யே என்னப் பண்ணும் வடிவைக் காட்டி * நஜீவேயம் க்ஷணமபி * என்னப் பண்ணும் வடிவைக் கிடீர் கொண்டது".

என்றுள்ள ஸ்ரீஸூக்தியின் சுவைமிகுதி காண்க. 'அழகில் குறைந்த வடிவைக் காட்டி அழகில் நிறைந்த வடிவைக் கொள்ளை கொண்டானே'! என்பதுதான் இங்குப் பரமதாத்பரியம்............... ★

# தேவு மற்றறியேன்—5

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

தமது ஆசாரியரான நம்மாழ்வாரையன்றி தேவு மற்றறி யேன் என்று நிலைத்திருந்த மதுரகவியாழ்வாருடைய நிஷ்டை மிகவுயர்ந்தது என்று அதைப்பற்றி ஒழுகிய நம் பூர்வர்கள் வைபவங்களை மேலும் விவரிப்போம். இங்கு ஒரு சுவையான விஷயமும் அநுபவிக்கத் தக்கது. எம்பெருமானின் பரத்து வத்தை (ஒப்பிலா மேன்மையை) நிலை நாட்டும் "திண்ணன் வீடு" என்ற திருவாய்மொழியில் மூன்றும்பாட்டின் ஈற்றடி, 'மாறனின் மிக்குமோர் தேவுமுளதே' என்பது. மால் தன் னில் மிக்கும் ஓர் தேவும் உள்ளதோ? என்று கேட்பதே ஆழ் வாருடைய நோக்கு இங்கு. 'மால் தனில்' என்பது இலக் கண விதிப்படி 'மாறனில்' என்றாகும். பாசுரத்தை 'மால் தனில்' என்று பிரித்து அச்சிடுவதையும் காண்கிறோம். ஆயினும் 'மாறனின்' என்பதன் சப்தஸ்வாரஸ்யம் இன் சுவையே வடிவெடுத்தது. இப்படி திருமாலவன் கவி வாயில் வந்தது பகவத் ஸங்கல்பமே மாறன் என்று கொண்டாடப் படும் ஆழ்வாரை மிக்கும் தேவும் உள்ளதோ? மதுரகவி களின் ஹ்ருதயத்தையன்றோ ஆழ்வார் தம்வாக்கால் வெளி யிட்டுவிட்டார்?

மேல் நாட்டில் (மைசூர் பிராந்தத்தில்) பிறந்து வளர்ந்து பெரிய அத்வைத 'வேதாந்தி'யாக விளங்கியவர் மாதவர் என்பவர். இவரை நம தரிசனத்துக்காகும்படி திருத்திப் பணி கொண்டார் கூரத்தாழ்வான் குமாரரான பராசரபட்டர். மாதவர் சந்யாசாச்ரமம் பூண்டு பட்டரையே எல்லாமாகக் கொண்டு இருந்ததால் பட்டரால் நம்முடைய ஜீயர் என்று அபி மானிக்கப்பட்டார். இவரே நஞ்சீயர் என்ற மஹாசார்யர். ஒரு

சமயம் நம்பெருமாள் பட்டருக்கு பிரம்மரதம்* தந்து கௌரவிக்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் பட்டரை பிரம்மரதத்தில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீபாதம் தாங்கி (தோளில் சுமந்து) நடக்க, ஜீயர் தாமும் ஸ்ரீபாதம் தாங்க வென்று புகுந்தார். "உமது உத்தமாச்ரம (ஸந்யாஸ) நிலைக்குச் சேராது" என்று பட்டர் தடுக்க, ஜீயர் "ஆசார்யகைங்கர்யத்துக்கு இந்நிலை சேராதாயின் இந்த முக்கோலை ஒடித்துப்போட்டு வெள்ளை உடுத்துகிறேன்" என்று த்ரிதண்டத்தை முறிக்க முற்பட்டாராம்.

* [illegible]

எந்த நிலையிலும் ஆசார்ய கைங்கர்யமே மிகவும் முக்கியம் என்றிருந்த நஞ்சீயர் அநுஷ்டானம் அறிந்து போற்றற்குரியது, ஒரு சமயம் பட்டர் இவர் மடியில் தலைவைத்துத் தூங்கிவிட, அயர்ந்து தூங்கும் ஆசார்யன் நித்ரைக்கு பங்கம் வரக்கூடாதென்று பலமணிநேரம் அசையாமல் வீற்றிருந்தாராம். தாம் பிறந்த தேசத்தையும், அங்கிருந்த தமது உறவினர்களையும் துறந்து, தமது எல்லாப்பொருள்களையும் ஆசாரியருக்குச் சமர்ப்பித்து அவர் இருந்தவிடத்தே இருந்து, அவர் திருவடிகளே தஞ்சம் என்று திடமாக நம்பி அவருக்கு ஆன அடிமைகள் எல்லாம் செய்திருந்தவர் நஞ்சீயர்.

நஞ்சீயரால் 'நமதுபிள்ளை' என்று அபிமானிக்கப்பட்ட ஆசாரியர் நம்பிள்ளை. இவரிடம் அன்பு பூண்டு இவருக்கு எல்லா அடிமைகளையும் செய்து போந்தவர் பின் பழகிய பெருமாள் ஜீயர் என்னும் உத்தமாச்ரமி இவர் தமது சரீரம் திடமாக இருக்க வேணும் என்று பல ஔஷதங்களை உட்கொள்வராம். 'பேஷஜம்-பிஷக்' என்று ஸ்ரீஸஹஸ்ரநாமத்தில் படிக்கப்பட்டுள்ளபடி மருந்தாகவும் மருத்துவனாகவும் எம்பெருமானே இருக்க, அவனடியார்கள் வேறு வைத்தியம் செய்துகொள்வது உண்மை ஸ்ரீவைஷ்ணவ நிலைக்குச் சேராதன்றோ? ஜீயர் திருவுள்ளம் மேலே வெளியாகும்.

சிறிய திருமடலில் "தான்பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்" என்னும் சொற்றொடருக்கு நம்பிள்ளை சிஷ்யரும் ஆசார்யஸார்வபௌமருமான பெரியவாச்சான்பிள்ளை தரும் விளக்கம் — "இவள் (பரகாலநாயகியின் தாய்) தான் எம் பெருமானை வலம் வந்து வணங்கினால் எங்கு பயன்கருதிச் செய்யும் பூஜை (ஸாதநாநுஷ்டானம்) ஆகுமோ என்று அதைத் தவிர்ந்திருப்பவள். ஆயினும் தன் மகள் நோயுற்ற போது, அவள் நலனுக்காக சாஸ்தா என்ற க்ஷுத்ர தெய் வத்தைக் குறித்து ஒரு நமஸ்காரமும் செய்தாள்" என்பது. ஸ்ரீவைஷ்ணவன் எம்பெருமான் ஸங்கல்பத்தையே முற்றும் நோக்கியிருக்கக் கடவன். தானாக தனக்கு நலன் தேடுகை கூடாது என்றிருக்கையே ஸ்ரீவைஷ்ணவ மரபு. இப்படி இருக்க, பின்பழகிய பெருமாள் ஜீயர் ஒரு ஸமயம் நோயுற்றுப் படுக்கை யாகக் கிடக்க, சில அன்பர்களை அழைத்து, 'நீங்கள் நம்பெரு மாளிடம் சென்று அடியேன் உடம்பு சீக்கிரம் குணமடைந்து பண்டுபோல் திடமாக வேண்டுமென்று 'ஏழை ஏதலன்' (திரு மொழிப்பதிகம்), 'ஆழியெழ' (திருவாய்மொழிப் பதிகம்) பாடி வேண்டுங்கோள்" என்று வேண்டினார். அவர்களும் அப்படியே செய்ய, ஜீயர் நோய் நீங்கப் பெற்று ஸுகமடைந்து ஆசார்ய கைங்கர்யங்களில் ஈடுபட்டிருந்தார். ஞானம், அநுஷ்டானம் இவைகளில் முதிர்ந்த ஸ்ரீவைஷ்ணவர், அதிலும் ஸந்யாஸி— ஜீயர் தம் நோயில் இப்படிச் செய்தது முறையாமோ? என்று சிலர் நம்பிள்ளையிடம் வினவ, பிள்ளையும் அங்குள்ளாரை, ஜீய ருடைய திருவுள்ளம் யாதாயிருக்கும்? என்று வினவ, 'ஸ்ரீரங் கத்தில் வாழ்வதில் ஆசையே காரணம் என்றார் எங்களாழ் வான் என்பவர். ஸ்வாமி நம்பிள்ளை கோஷ்டியில் பகவத் விஷயம் கேட்பதில் உள்ள ருசியே காரணம்" என்றார் அம் மங்கியம்மாள் என்னும் பெரியவர்; நம்பெருமாளின் திருமுக மண்டல ஸேவையை இழக்கமுடியாமை காரணம்" என்றார் அம்மங்கிப் பெரிய முதலியார். இதையெல்லாம் கேட்ட நம் பிள்ளை, ஜீயரை, "இப்படிகளோ உமது எண்ணம்?" என்று

கேட்க, ஜீயரும் "அன்று அன்று: தேவரீர் நீராடும் போது கூடவிருந்து பணி செய்து, பிறகு உடை உடுத்தி உலவும்போது குறுவேற்போடு (முத்து முத்தான வியர்வைத் துளிகளுடன்) சிவந்து விளங்கும் திருமுகத்தை ஸேவித்துக் கொண்டு விசிறி வீசுவது போன்ற கைங்கர்யங்களைச் செய்வதொழிய பரமபதம் போய் செய்வதொன்றுமில்லை. இதற்காகவே அடியேன் ஆரோக்யமாக இருக்க விரும்புவதும்" என்று பதில் தந்தார் இந்த சரித்திரங்களை அடியொற்றியே பொய்யில்லாத நம் மாமுனிகளும்,

பின்பழகராம் பெருமாள்சீயர் பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கவாசையினால் — நம்பிள்ளைக்
கானவடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே!
ஊனமற எப்பொழுதும் ஓர்

என்று உபதேசரத்தினமாலையில் பாசுரம் அருளிச் செய்தார். இவர் ஒரு சமயம் ஸ்வரூப, உபாய, புருஷார்த்தங்களைத் தாம் எண்ணியுள்ளபடியை நம்பிள்ளையிடம், "தேவரீர் திருவடிகளே தஞ்சம் என்று நினைத்திருக்கும் பரவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கையே அடியேனுக்கு ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமானமே உபாயம்; அவர்கள் முகமலர்த்தியே உபேயம் என்று நினைத்திருக்கிறேன்" என்று விண்ணப்பம் செய்தாராம்.

நம்பிள்ளை ஒரு சமயம் திருவெள்ளரையிலிருந்து சிலருடன் ஸ்ரீரங்கம் வரும்போது திருக்காவேரியில் நீர் அதிமாயிருந்ததால் ஒரு தாழியில் (நீரில் மிதக்கும் வட்டமான ஒரு சாதனம் — ஓடம் போன்றது) பயணமாக, திடீரென்று அஸ்தமித்து இருட்டாகிக் காற்றுமடிக்க, தாழிக்காரன், "கனம் அதிகமாயிற்று; யாராவது தாழியை விட்டு இறங்கினால் தான் அக்

கரை சேரலாம்'' என்ன அதிலிருந்த ஒரு அம்மையார், ''தோழிக் காரா! நீ பல்லாண்டுகள் நன்றாக வாழ்வாய். ஸ்வாமி நம் பிள்ளையை பத்திரமாகக் கொண்டு அக்கரை சேர்ப்பி'' என்று சொல்லி நீரில் குதித்து விட்டார். தோழியும் அக்கரை சேர்ந்தது. நம்பிள்ளை 'ஒரு ஆத்மா தட்டுப்பட்டுப் போச்சுதே'' என்று பலகால் சொல்லி வருத்தப்பட, அந்த அம்மையார் தான் க்ஷேமமாயிருப்பதாகக் குரல் கொடுத்தார். பிள்ளையும் தோழிக்காரனை மறுபடி சென்று அந்த அம்மையாரை அழைத்து வரச் சொல்ல, அவனும் சென்று, அவர் ஒரு திடரைப் பற்றி இருப்பது கண்டு மகிழ்ந்து தோழியில் அழைத்து வந்து கரை சேர்த்தான். அம்மையாரும் நம்பிள்ளை திருவடிகளில் வணங்கி, ''அடியாள் ஆற்றிலே விழுந்த போதும் தேவரீர் அங்கே ஒரு கோரை மேடாக வந்து ரக்ஷித்தருளிற்றே'' என்று கொண்டாட, நம்பிள்ளையும், ''உமது விச்வாஸம் இப்படியானால் அதுவும் அப்படியே ஆகாதோ!'' என்று அருளினார். இதனால், தன் சரீரத்தை அழியமாறியாகிலும் ஆசாரியனைப் பேண வேணும் என்ற நிஷ்டை உண்டானால் பகவான் அந்த நிஷ்டையுள்ளவனைத் தானே வந்து ரக்ஷிக்கிறான் என்னுமர்த்தம் வெளியாகிறது.

உய்யநினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே
வையும் அன்புதன்னை இந்த மாநிலத்தீர்! — மெய்யுரைக்கேன்

பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்
கையிலங்கு நெல்லிக்கனி.

என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரத்தைக் குறிக்கொள்க.

(தொடரும்)

# திருவாய்மொழியும் த்வயமும்

ந்யாயவேதாந்த வித்வான் வாகம்ருத வர்ஷி
ஸ்ரீஉ.வே. வேளுக்குடி K. வரதாசாரியர் ஸ்வாமி

நாராயணபதத்திற் கூறப்பட்ட குணங்களுக்கு இருப்பிடமான பரமாத்மஸ்வரூபம் "நக்ராஹ்ய:" என்றும் "ஸ்வப்ந தீகம்யம்" என்றும் ஊனக்கண்ணுக்கு அவிஷயமாகக் கூறப்பட்டுள்ளதாகையாலும்



கண்டாலல்லது ஆச்ரயிக்க விரகில்லாமையாலும், கண்டு பற்றுகைக்காக திவ்ய மங்கள விக்ரஹத்தைச் சொல்லுகிறது. "சரணௌ" என்கிறபதம். ஆச்ரயணத்துக்கு விக்ரஹம் (திருமேனி) அபேக்ஷிதமாகில் வாத்ஸல்யாதிகள் செய்கிறது என்னெனில்:-கண்டு குற்றம் கைவிடாமைக்கும், அங்கீகாரம் தன் பேறுகைக் அங்கீகார விஷய பூத சேதநர் சிறுமை பாராமைக்கும் வாத்ஸல்யாதிகள் உண்டானாலும், இவை ஆச்ரயணோந்முகனைக் குறித்தாகையாலே ஆச்ரயணம் சக்ஷுரிந்த்ரியக்ராஹ்யமான விஷயத்திலல்லது கூடாமையாலே, அந்த வாத்ஸல்யாதிகளாலே ப்ரகாசிதமாய், ஸௌலப்ய குணகார்யமாய், "ஸாந்தம்ப்ரஹ்ம" என்னும்படி குணங்களிலும் அந்தரங்கமாய், "அடியதோருருதேஹ:", என்கிறபடியே அபிமதமாய், "சாட்குண்ய விக்ரஹம்" என்கிறபடியே மாணிக்கச் செப்பில் பொன் போலே அக

வாயில் ஆத்ம குணங்களை ப்ரகாசிப்பிக்கக் கடவதாயிருக்கிற திவ்ய மங்க விக்ரஹத்தைச் சொல்லுகிறது என்றபடி. ஆனால் விக்ரஹ வாசகமான சப்தத்தையிட்டுச் சொல்லாதே ஏகாவயவமாத்ரவாசகமான சரண சப்தத்தையிட்டு த்திரு மேனியைச் சொல்லுவான் என்னென்னில், ஆச்ரயணேந் முகனுண இச்சேதநன் ப்ரணவத்தில் கூறப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வத்தை யறிந்தவனுகையாலும், இந்நாராயண பதித்திற் கூறப்பட்ட ஸ்வாமித்வசேஷித்வங்களுக்கு எதிர்த் தட்டான தன்னுடைய ஸ்வத்வசேஷத்வங்களை யநுஸந்தித்த வனுகையாலும், ப்ரஜைக்கு மாதாவினுடைய ஸர்வாவயவங் களிற்காட்டில் தனக்கு தாரகமான ஸ்தந்யத்தையுபகரிக் கையாலே ஸ்தநத்திலே விசேஷ ப்ராப்தி யுண்டாமாபோலே "அடியேன்—சேவடியன்றிநயவேன்" என்று ஸ்வரூபத்துக்கு அநுரூபமான அம்ருதத்தை "விஷ்ணே : பதே பரமே மத்வ உத்ஸ :" "உன்தேனமலரும்திருப்பாதம்" "அம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே" என்கிறபடியே ப்ரவஹிக்கையாலும், சேஷ பூதனுடைய உக்தியாகையாலும், கையைப்பிடித்துக்கார்யம் கொள்ளுமதிலும் காலைப்பிடித்துக் கார்யம் கொள்ளுமவன் பக்கலிலே க்ருபை அதிசயித்திருக்கையாலே கார்யம் கடுகப் பலிக்கைக்கு உறுப்பாகையாலும் திருவடிகளுக்கு வாசகமான சரணசப்தத்தாலே திருமேனியைச் சொல்லுகிறது என்றபடி. மேலும், மேலே "சரணம் ப்ரபத்யே" என்கிற உபாய வரணத்துக்கு (சரணுகதிக்கு) ப்ரதிஸம்பந்தியாக விக்ரஹத் தைச் சொல்லுகையாலே, ஈச்வரன் வாத்ஸல்யமுகேன தம்முடைய பயத்தையொழித்து ருசியைப் பிறப்பித்து, ஜ்ஞாந சக்த்யாதிமுகேன கார்ய கரனுகிருப்போலே திருமேனி முகமாகவும் ருசிஜநகனும் உபாய பூதனுகையாலே அந்த உபாயத்வப்ராதாந்யந்தைப்பற்ற விக்ரஹத்தை "சரணம்" என்று சொல்லுகிறதாகவுமாம்.

"தெரிவைமார் உருவமே மருவி" "மாதரார் கயற்கணென் னும் வலையிற் பட்டழுந்து வேனை" சிலம்படியுருவில் கரு

நெடுங் கண்ணார் திறத்தனாய்'' என்கிறபடியே நாசகரமான நாரீஜநங்களுடைய நயநங்களில் அகப்பட்டு நாரகிகளாயப் போருகிற நாரஜநங்களை "தன் பால் ஆதரம் பெருகவைத்த அழகன்" "காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி" "என் செய்ய தாமரைக்கண் பெருமானார்'' "என் செய்ய தாமரைக் கண்ணன் என்னை நிறை கொண்டான்'' ''தாமரைக் கண்களுக் கற்றுத் தீர்ந்தும்'' என்கிறபடியே தன் பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணி, "ஜிதம்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே" என்று தோற்றுத் திருவடிகளிலே விழும்படி பண்ணி, "ஸர்வதா சரணத்வந்த்வம் வ்ரஜாமி சரணம் தவ'' என்று பின்னைத் தன்னையே யுபாயமாகப் பற்றி, "பாஹிமாம் புண்டரீகாக்ஷ நஜாநே சரணம் பரம் த்வத்பாத கமலாதந்யத் நமே ஜந்மாந்தரேஷ்வபி, நிமித்தம் குசலஸ்யாஸ்தி யேந கச்சாமி ஸத்கதிம்'' என்று யாதொரு குசலத்தாலே ஸத்கதியை ப்ராபிப்பன், அந்த குசலத்துக்கு நிமித்தம் தேவரீர் திருவடிகளை யொழிய வேறில்லை என்று, ப்ரதமத்திலே தோற்பித்த கண்ணமுகும், தோற்றுவிழும் திருவடிகளை யொழிய உஜ்ஜிவனோபாய மில்லை யென்று சொல்லும்படி பண்ணி, "நகாமகலுஷம் சித்தம் மமதே பாத யோஸ்ஸ்த்திதம்'' என்று திருவடிகளில் ப்ராவண்யத்தாலே வேறொன்றில் மநஸ்ஸு கலங்காதபடி பண்ணி, ஆகவிப்படி, ருசிஜநகனுமாய், ருசிபிறந்தால் உபாயமாய், இதர விஷயங்களில் ஸங்கத்தைப் போக்கவற்றாய்; ''மாக மாநிலம் முழுதும் வந்திறைஞ்சும் மலரடி" "மேலை விண்ணோரும் வந்திறைஞ்சுமென் தளிர் போலடி'' என் கையாலே ஸர்வாபாச்ரயமாய், ''திருமாநீன் கழல்'' "திருக் கமலபாதம் வந்து" என்கையாலே ஆச்ரிதரிருந்த விடங்களிலே தானே சென்று அங்கீகரிக்கக் கடவதாய், "நின்மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாயால்'' என்று ஜ்ஞாந விஷயமாய், "உன்னிணைத் தாமரைகட்கு அன்புருகி நிற்குமது'' "தொழு நீரிணையடிக்கே யன்பு சூட்டிய'' என்று பக்தி விஷயமாய் அந்த பக்தியாலே கலங்கி "உபாயம்வாப்யபாயம்வா க்ஷமோந்யந் நாவலம்பிதும்'' "என்னான் செய்கேன்'' என்கிறபடியே உபாயாநுஷ்

டாநம் பண்ண சக்தரல்லாதார்க்கு "நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று உபாயமாய், "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்" "கற்றினம் மேய்த்த வெந்தை கழலிணை பணிமின்" என்று உபதேச ஸமயத்திலும், "கழல்களவையே சரணாகக் கொண்ட" "கண்ணனைத் தான் பற்றி" "வேங்கட மாமலை மேய ஆயன் அடியல்லது மற்றறியேனே" என்றும் ஸ்வீகார ஸமயத்திலும் வ்யதிரிக்தங்களிற் செல்லாதபடி பண்ணக் கடவதாய், "செய்ய நின் திருப்பாதத்தை யான் என்று கொல் சேர்வது" "நீடுறைகின்ற பிரான் கழல் காண்டுங் கொல்" "பாத பங்கயமே தலைக்கணியாய்" "த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி கதா புந:" என்று ப்ராப்யமாக ப்ரார்த்திக்கப் படுமதாய், "தாள் கண்டு கொண்டு என் தலைமேல் புனைந்தேன் சரணங்கள்" என்கையாலே ப்ராப்யத்வேந லப்தமாய், "நலங்கழலவனடி நிழற்றடம்" "ஆத்தன் தாமரையடி" என்று நிழல் கொடுத்து ஆப்தமாக வழி நடத்தி, "தாளின் கீழ் சேர்த்து" "பாதபற்புந்தலை சேர்த்து" "பொன்னடி சேர்த்து வேறே போக விடல்" என்று நிஷ்கர்ஷித்து ப்ரார்த்திக்க ப்ரார்த்தனைக்கநுகுணமாயருளி அடிக் கீழிருத்திக்கொண்டு இறைபணி போர்த்து" "அடிக்கீழ் குற்றேவல் "என்கிற கைங்கர்யத்திலே மூட்டி முடிய நடத்தக் கடவதாயிறே சரணோபலக்ஷிதமான விக்ரஹ மிருப்பது.

---

தற்போது பத்ரிகை நடத்தும் ஆசிரியர்களிலேயே அதிக வயதானவர் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியே. அதாவது 88 வயது நிரம்பிய பத்ரிகை ஆசிரியர் தற்போது யாருமே இல்லையென்று சொல்லலாம். அதுபோல பத்ரிகை ஆசிரியர்களிலேயே குறைந்த வயது உடையவர் நமது கீதாசார்யன ஆசிரியராகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். (கீதாசார்யன் ஆசிரியருக்கு வயது 25) பத்ரிகாசிரியர்களிலேயே மூத்தவருக்கு பதரிகாசிரியர்களிலேயே இளைஞர் சிறப்பு மலர் வெளியிடுவது பொருத்தமல்லவா ? —'மதுரகவி'

# மாலையும் வந்தது மாயன் வாரான்

பேராசிரியர், சொல்லழகர்
K. A. மணவாளன், M. A. B. O. L.

ஆயர்பாடிக்கு அணிவிளக்காகவும், கோவலர் தம் குலக் கொழுந்தாகவுமுள்ள கண்ணன் எங்கே? குயில்கள் கூவிக் குலாவும் சோலையில் மயில்களும் ஒய்யாரமாக நடனமாடுகின்றன. மல்லிகையின் வாடையைத் தூவிக் கொண்டு மாலைக் காலமும் வந்தது; ஆனால் மாயன் வரவில்லை. தலைவி பெருமூச்சு விடுகிறாள். மாலை மதயானைபோல் வருகின்றதே என்று ஏங்குகிறாள். மயிலும் குயிலும் மகிழ்ச்சியைத் தரவில்லை. காலையில் பசுமேய்க்கப் போன கண்ணன் மாலையாகியும் வரவில்லையே என்று மயங்குகிறாள். காட்டில் கண்ணனுக்கு என்ன ஆபத்தோ என்று கலங்குகிறாள். அவன் வாராதது அவளுக்குத் தாபத்தை மிகுதிப் படுத்தியது. விரக வேதனையால் மெலிந்துழலும் தலைவியைத் தோழிகள் தேற்றுகின்றனர். அவள் தாபத்தைப் போக்க மலர்ப்படுக்கையில் அவளைப் படுக்க வைக்கின்றனர்.

ஆயினும் தாபம் குறையவில்லை. மாறாக மிகுவதாயிற்று. பசுக்கூட்டங்களும் திரும்பி விட்டன. கன்றுகளை நினைத்து அவை எழுப்பும் ஒலிகளும் காதில் விழுகின்றன. கூடுங்கால், இன்பம் துய்ப்பதற்குத் துணை புரிந்த அத்தனைப் பொருள்களும், பிரிவின்கண் கங்கு கரையில்லாத் துன்பத்தை எழுப்பி விடுகின்றன. இளந்தென்றலும், தண்மதியும், அந்திமாலைச் சிறப்பும் தலைவனை விட்டுப் பிரிந்த தலைவியை வாட்டுகின்றன. அந்த அந்திமாலை நேரத்தில் அதற்கு முந்தினநாள் கண்ணன் குழலூதிய காட்சி அவள் நினைவுக்கு வந்தது. செங்கண் கோடவும், செய்யவாய் கொப்பளிக்கவும், புல்லாங்குழலைக் கண்ணன் தன் மெல்லிய சிறு விரல்களால் தடவிப் பரிமாறவும் அவன் முடியில் அணிந்திருந்த மயில் தோகை அசையவும் கோவிந்தன் குழலோசையைக் கேட்கின்றாள்.

கண்ணன் குழலூதும் போதே அவன் கண்கள் ஏதேதோ தூது மொழிகளைப் பேசினவாம். அவன் இசைத்த பாடலின் இசை அவளை மயக்கச் செய்தால் பரவாயில்லை. மாளவே செய்து விட்டதாம். அவ்வளவு காதலை — நோவை — பைத்தியத்தை அக் குழலோசை உண்டாக்கி விட்டது. இப்படிப் படாத பாடு படுத்திய கண்ணன் இன்று, மாலையாகியும் வரவில்லையே என்று ஏங்குவதாக அப்பாடல் உணர்த்துகின்றது. பாடலைப் பாடிய தலைவி யார் தெரியுமா? நம்மாழ்வாராகிற பராங்குச நாயகியே; பாட்டைப் பாருங்கள்.

**"ஊதுமத் தீங்குழற்கே உய்யேன் நான் அது**
**மொழிக் திடை யிடைத்தன் செய்கோலத்**
**தூது செய கண்கள் கொண்டு ஒன்று பேசி**
**தூமொழி யிசைகள் கொண்டு ஒன்று நோக்கிப்**
**பேதுறு முகஞ் செய்து நொந்து நொந்து**
**பேதை நெஞ்(சு)அற அறப் பாடும் பாட்டை**
**யாது மொன்றறி கிலம் அம்ம! அம்ம!**
**மாலையும் வந்தது மாயன் வாரான்!"**

இப்பாடலின் அழியா வனப்பும் கற்பனைச் செறிவும், சொல் நயமும் நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன. "வாய் பார்க்கின்றது; கண்கள் பேசுகின்றன" என்ற மாறுபட்ட அழகுச் சித்திரத்தை எழுப்பிய நம்மாழ்வாரின் கவித்திறனை என்னென்று மொழிவது.

இப்படித் தன்னால் விரும்பப் படும் கண்ணனைக் காதலித்த தலைவியாகிய நம்மாழ்வார், அவன் அருட்காட்சி மறைந்த பொழுது இருள் வெள்ளத்தில் தனித்து நிற்பதாக உணர்கின்றார். மாலை மறைந்து இரவாகியது. அந்த இரவோ நீண்டு கொண்டே போகிறது என்கிறார். ஊரெல்லாம் உறங்கி உலகெல்லாம் நள்ளிருளாய் நீண்ட அந்நேரத்திலாவது, என் கண்ணன் வாரானோ! என் செல்வன் வாரானோ! என்று நம்மாழ்வாராகிற நாயகியின் உள்ளம் ஏங்குகிறது. நள்ளிருளாய்

நீளும் அவ்விரவினுக்கு விடிவு இல்லையோ! சூரியனும் வாராமல் எங்கே போய் ஒளிந்துக்கொண்டான்! ஒருக்கால் இப்பெண் படும் பாட்டை — துன்பத்தைக் கண்டு பொறுக்க மாட்டாமல் எங்காவது போய் ஒளித்துக் கொண்டானோ? என் தாயும், மற்ற தோழிமார்களும் ஒரு கவலையுமின்றி உறங்குகின்றார்களே! இந்நீளிரவில் என் உயிரைக் காப்பாற்றுவார் ஒருவரும் இல்லையே! என்றெல்லாம் ஏங்கிய ஆழ்வாரகிய நாயகியின் உள்ளம் தன்னைப் போல் துன்பப் படுகின்ற பனிக் காற்றையும், இரவு பகல் உறக்கமின்றித் தவிக்கும் கடலையும் நினைக்கின்றது.—ஒளியிழந்து.

கலை குறைந்து காணப்படும் சந்திரனும் கண்ணன் கலவி கிடைக்காமல்தான் கரைந்துவிட்டானே என்று கருதுகின்றது. மேகமும் கறுத்து இருளாய் முடிக்கின்றதே! என்றும், பின்பு சிறிது நேரத்தில் மழை பொழிந்தவுடன் ஐயோ! நீயும் என்னைப் போல் விரகவேதனையால் அழுகிறாயோ என்றும், இப்படிப் பலவிதமாகத் தன்னைப் போலவே துன்புற்றுக் கிடக்கின்றன என்று இயற்கையாய் நிகழும் செயல்களுக்கெல்லாம் காரணம் காட்டிப் பேசுவனவாக ஆழ்வாருடைய பாடல்கள் காண்கின்றன. அவைகளைக் காண்போம்:

" ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாம் தேறி ஓர் நீளிரவாய் நீண்டதால் "
" காவி சேர் வண்ணன் என் கண்ணனும் வாரானால் "
" பெண் பிறந்தார் எய்தும் பெருந்துயர் காண்கிலேன்
என்று ஒண் சுடரோன் வராது "
" நின்றுருகுகின்றேனே போல, நெடுவானம்
சென்றுருகி நுண்துளியாய்ச் செல்கின்ற கங்குல் "

என்றெல்லாம் இப்பாடல்களால் பராங்குச நாயகி கண்ணனுகிற தலைவனைக் காமுற்றுப் பாடியுள்ளார்.

இவ்விதம் பாடிய தலைவி வீட்டிற்குள்ளே புகுந்தாள். அங்கே விளக்கு எரிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறாள். ஏ! தீபமே! நீயும் அந்தக் கண்ணன் கண்ணழகில் ஈடுபட்டுத்தான்

வெந்து கொண்டிருக்கிறாயோ? என்று கேட்கிறாள்? அவன் பேச்சிலும் தலைமாலையிலும் மயங்கித் தான் எரிகிறாயோ! என்றும் கேட்கிறாள். இவ்வரிகளில்தான் உத்தமனை அழகு!

இப்படிப் புலம்பும் மகளைத் தாய் பார்க்கிறாள். இவளுக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டது. இது என்ன நோயோ அறியேன்; அல்லது பேய்தான் பிடித்தாட்டுகிறதோ என்று புலம்புகிறாள். ஆட்டைப் பலியூட்டிக் குறி கேட்க முனைந்தாள். வீட்டு வாசலில் ஒரே கூட்டம். கொட்டி முழக்கித் தெய்வங்களை வரவழைக்கின்றனர். இக் காட்சிகளைக் கண்ட தோழிமார்களுக்கு வேதனையாக இருந்தது. அவர்கள் ஒன்று கூடி அந்த மூட நம்பிக்கைகளைக் கண்டித்து பேசுகின்றனர். மேலும் உன் மகள் கொண்ட நோய் தெய்வநோய் என்றும் கூறினர். பின்பு மெதுவாகக் காதலியும் தானுற்ற நோயைத் தாயார்க்குச் சொல்லுகிறாள். "அம்மையே! பெண்களை உண்ணும் அக்கண்கள் யமனோ? கண்கள்தாமோ தெரியவில்லையே என்றும், நோக்கும் திசையெல்லாம் அந்தவாயும், மின்னல் போன்ற அப் புன்சிரிப்பும், ஒளி பொருந்திய முகமும் என் உயிரை ஈர்க்கின்றனவே" என்றும் விவரமாக—ஆனால் தைரியமாகச் சொல்கிறாள்.

"இதுகாண்மின் அம்மனைமீர் இக்கட்டு
விச்சி சொல்கொண்டு நீர்
எதுவானும் செய்(து) அங்கோர் கள்ளும்
இறைச்சியும் தூவேல்மின்."

இனி யார் எப்படி நினைத்தால் என்ன? இவ்வூர் நிந்தை என்னை என் செய்யும்? என்று கேட்கிறாள். "தாமரைக் கண்களோடும் செங்கனிவாய் ஒன்றினோடும் செல்கின்றது என் நெஞ்சமே" என்று பகிரங்கமாகத் தன் காதலை வெளிப்படுத்தி விடுகிறாள். 'இவள் நெஞ்சம் இவள் வசம் இல்லை' என்று தோழி மார்களைப்போன்று தாய் தாய்மார்களும் உணர்ந்து கொண்டார்கள்.

# அன்புள்ள கீதாசார்யரே!

**P. B. அண்ணங்கராசாரியர்** காஞ்சீபுரம்-3

மாசி மாத இதழில் சில திருத்தங்கள்: பக்கம் 15ல் வல்லுனர் — பிசகு. வல்லுநர். லௌகீகம் — கி போதும். பக்கம் 20ல் சாஸ்த்திரம் — பிசகு. த் இருந்தால் தி கூடாது. தி இருந்தால் த் கூடாது ஒவ்வொரு சொல்லிலும் நீ ஆராய்ச்சி செய்ய வேணும். த், தி இரண்டும் இருக்க வேணுமானால் ஸ் ஓடிப்போக வேணும். சாத்திரம் "இணைந்தியல் காலை யரலக்கிகரமும்" என்று நன்னூல.

**வனஜா மாதவன் M. A**

P. B. A ஸ்வாமி கட்டுரையும் வேளுக்குடிஸ்வாமி கட்டுரையும் பழைய பாணியிலேயே இருக்கின்றன. சொல்வேந்தர் கட்டுரை எக்ஸலெண்ட்' — தனிப் பாணி. சாண்டில்யன் கட்டுரை 'அமுத நீரோட்டம்'. நா. பா. கட்டுரை 'ஜோர்'. டாக்டர். V V R கட்டுரை நெடுஞ்சாலைப் பயணம். கவனித்து ஆவன செய்யலாம். கீதாசார்யன் புகழ் பரவ வேண்டுமென்பதே எமது ஆசை.

**கோ. ஆராவமுதன்.** சென்னை—33

திருவல்லிக்கேணியிலிருந்து கீதாசார்யன் முத்து, மணி, வைரம் பதித்த தங்க ரதத்தில் அழகு பவனி வருகிறான். வடகலை தென்கலை பாகுபாடு குறைய சற்று வழி செய்தால் பிளவிலிருந்து விடுபட்டு கலியில் வைணவம் தழைத்தோங்க அவனே கதாசிரியனுமாவான்.

**ஜைனம்யன்** சென்னை-44

**இருவிருள் நீங்கி இருநிலம் உய்ய**
**அரும்பொருள் கீதை அளித்தான் —திருவருள்**
**தாங்கி வருமேடு தாரணியின் பேரொளியாய்**
**யாங்கும் பொலிக வளர்க.**

# ஆஸ்திகரே!

இம்மாதச் சிறப்பு மலரை ரசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இதுவொரு புதிய முயற்சியே. இம்முயற்சி வெற்றியடைய உங்கள் ஆலோசனைகளைக் கூறுங்கள். தொடர்ந்து சித்திரை மாதம் ஸ்ரீராமானுஜரைப் பற்றியும் வைகாசி மாதம் நம்மாழ்வாரைப் பற்றியும் சிறப்பு மலர்கள் வெளியிடலாம் என்றிருக்கிறோம். உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

நமது பத்திரிக்கையைப் பார்க்கும் பலர் இப்படிப்பட்ட ஒரு பத்திரிக்கையை எப்படி 75 பைசாவுக்கு கொடுக்க உங்களால முடிகிறது? விலை மிகவும் குறைவாக இருக்கிறதே என்று கேட்கிறார்கள். உண்மைதான். அதிகம் பேர் வாங்கிப் படித்துப்பயனடைய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகத்தான் விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்படும் நஷ்டத்தை விளம்பரங்கள் மூலம்தான் ஈடுகட்டுகிறோம். இதே விலையில் இன்னும் அதிக பக்கங்களுடன் கீதாசாரியனை வெளியிட வேண்டுமென்று எங்களுக்கும் விருப்பம்தான். அதற்கு அதிக விளம்பரங்கள் தேவை.

விளம்பரங்கள் தரக்கூடிய — பெற்றுத் தரக்கூடிய — அன்பர்கள் உதவி செய்தால் ஆயிரக்கணக்கான கீதாசார்யன் வாசகர்கள் பயனடைவார்கள். அவ்வன்பர்கள் தங்களால் இயன்ற அளவு உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| விளம்பர விகிதம் | ஆண்டுக்கு | மாதத்திற்கு |
|---|---|---|
| அட்டைகள் wrapper) | 1500 | 150 |
| முழுப்பக்கம் | 1000 | 100 |
| அரைப்பக்கம் | 500 | 50 |

(விளம்பர விண்ணப்பத்தாள்கள் Advt. Tariff) கீதாசார்யன் அலுவலகத்தில் கிடைக்கும்.)

—ஆசிரியர்

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achaaram, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.

நம் தரிசனத்துக்குக் கண்ணாக அமைந்தன நூற்றெட்டு திவ்ய தேசங்கள். அவற்றுள் கோயில், திருமலை, பெருமாள் கோயில்கள் மிகச்சிறந்தவை என்பது யாவரும் அறிந்ததே.

அதிலும் ப்ரதம கணநீயமான கோயில் நம்பெருமாள் இந்த தரிசனத்தை ''எம்பெருமானார் தரிசனம்'' என்று பெயரிட்டு நாட்டி வைத்தார். அது தழைத்து மேலும் மேலும் வளர அங்கேயே ''ஸ்ரீ சுதர்சனாழ்வாரை'' நியமித்தார். அப்படியே பெருமாள் கோயில் தேவப்பெருமாள் இந்த தரிசனத்தை வளர்த்த எம்பெருமானார் நினைவாக அங்கே 'ஸ்ரீராமாநுஜனை'' அவதரிப்பித்தார்.

இப்பத்ரிகைகள் ஸம்ஸாரி சேதநர்களுடைய அகவிருளைப் போக்கி அர்த்த பஞ்சக ஞானத்தை விளைவித்து பரபக்தி பரமபக்தி பர்யந்தமான அபிநிவேசத்தை ஜநிப்பித்து வருவதும் உலகமறிந்ததே

இது கண்ட திருமலையப்பனும் (வேங்கடகிருஷ்ணனும்) கீதாசாரியனாய், தானே தோன்றி யுள்ளான் போலும்.

இப்படி எம்பெருமான்களுடைய விசேஷ கடாக்ஷத்தால் இப்பத்ரிகைகள் ''வர்த்த தாம் அபி வர்த்ததாம்'' என்று தழைத்தோங்க எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக. முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு, பின்னோர்ந்து தாம் அதனையே பேசியும் எழுதியும் போர வேணுமென்பது நம் அவா.

இப்பத்ரிகை ஆசிரியர், அதற்குச் சாதகர்கள், போஷகர்கள், எல்லாருக்கும் எல்லா விதமான ச்ரேயஸ்ஸுக்களையும் அருளுமாறு கீதாசார்யனை அடிபணிந்து ப்ரார்த்தித்து அநேக மங்களாசாஸநங்களைச் செய்கிறோம்.

— ஸ்ரீராமாநுஜன்